SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:05, Pages:56
DECEMBER-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2024,
விலை ரூ.20/-



**கீதா ஜெயந்தி**
**11-12-2024**

சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்! உலகு
தன்னை வாழநின்ற நம்பீ! தாமோதரா! சதிரா! என்னையும்
என்னுடைமையையும் உன் சக்கரப் பொறியொற்றிக் கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே?

–பெரியாழ்வார்

# ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை

## (ஒரு நாள் நன்கொடை திட்டம்)

அன்னம் பரப்ரஹ்ம ஸ்வரூபம் – உணவு தெய்வ வடிவம். எல்லா தானங்களில் சிறந்தது அன்னதானம். இதை நன்கு அறிந்த தி.தி.தே. திருமலை, திருப்பதி, திருச்சானூர் போன்ற இடங்களில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கி வருகிறது. அன்னதானத்திற்கு ஒரு நாள் நன்கொடை திட்டம் குறித்து அனைவரும் அறிந்ததே. "ஒரு நாள் நன்கொடை திட்டத்திற்கு" ஒரு நாளுக்கு ரூ. 44 இலட்சம் செலவு ஆகிறது. அச்செலவானது கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்தப்படுள்ளது.

1) காலை சிற்றுண்டி - ரூ.10 இலட்சம்
2) மதிய உணவு - ரூ.17 இலட்சம்
3) இரவு உணவு - ரூ.17 இலட்சம்
4) ஒரு நாள் முழுதும் - ரூ.44 இலட்சம்

மின்னஞ்சல் :
cdmc.ttd@tirumala.org;
dyeodonarcell@tirumala.org

0877-2263001
24/7
0877-2263472
(அலுவலக நேரம்)

மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு நன்கொடை வழங்கும் நன்கொடையாளர்களுக்கு கீழ்க்காணும் வசதிகள் வழங்கப்படும். (நன்கொடையாளர் : தனிப்பட்ட நபர்/நிறுவனங்கள்/நிறுமங்கள்/அறக்கட்டளைகள்)

1. ரூ.25.00 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப்போல ஒரு நாள் நன்கொடை திட்டத்திற்கும் அளிக்கப்படும்.
2. ரூ.10.00 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப்போல காலை சிற்றுண்டி, மதிய உணவு, இரவு உணவு ஆகியவற்றிற்கு தனித்து நன்கொடை அளிப்பவர்களுக்கு அளிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றோடு கீழ்க்காணும் முன்னுரிமை அளிக்கப்படும்.

அ) நன்கொடையாளர் பெயர் திருமலையிலுள்ள அன்னதானக்கூடத்தில்(எம்.டி.வி.ஏ.சி.) காட்சி ஆக்கப்படும்.

ஆ) நன்கொடையாளர் விரும்பும் ஏதாவது ஒரு நாள் மட்டும் அன்னதானக்கூடத்தில் (எம்.டி.வி.ஏ.சி., திருமலை) உணவு பரிமாறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**மேலும் தகவல்களுக்கு :**

துணைச்செயலாட்சித் தலைவர்
(நன்கொடையாளர் பிரிவு),
ஆதிசேஷு ரெஸ்ட் ஹவுஸ்,
தி.தி.தே. திருப்பதி.

**இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நன்கொடைகள் அனைத்தும் இதர நன்கொடைகளைப்போன்று கார்பஸ் நன்கொடையாகவே கருதப்படும்.**







*ய ஏநம் வேத்தி ஹந்தாரம்*
*யச்சைநம் மந்யதே ஹதம் ।*
*உபெ$_{4}$ள தௌ ந விஜாநீதோ*
*நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥*

**எவன் இந்த ஆத்மாவைக் கொல்பவனாக நினைக்கிறானோ மற்றும் எவன் இந்த ஆத்மாவைக் கொல்லப்பட்டவனாக நினைக்கிறானோ, அந்த இருவருமே (உண்மையை) அறியாதவர்கள். ஏனெனில், இந்த ஆத்மா உண்மையில் யாரையும் கொல்வதுமில்லை; யாராலும் கொல்லப்படுவதுமில்லை.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–19*

*சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்*
*பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்*
*பெற்றம் மேய்த் துண்ணும் குலத்திற் பிறந்து நீ*
*குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது*
*இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா!*
*எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்*
*மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.*

**கண்ணபிரானே! விடி காலத்திலே வந்து உன்னை தெண்டனிட்டு, உனது அழகிய திருவடித் தாமரைகளை மங்களாசாசனம் பண்ணுவதற்குப் பிரயோஜனத்தை கேட்டருள வேணும்; பசுக்களை மேய்த்து உண்ணும் இடைக்குலத்தில் பிறந்த நீ எங்கள் இடத்தில் அந்தரங்க கைங்கர்யத்தைத் திருவுள்ளம் பற்றாதொழிய வொண்ணாது இன்று கொடுக்கப்படுகிற இப்பறையைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம்; காலம் உள்ளவளவும் உன்னோடு உறவு உடையவர்களாகக் கடவோம்; உனக்கு மாத்திரமே நாங்கள் அடிமை செய்யக் கடவோம்; எங்களுடைய இதர விஷயவிருப்பங்களைத் தவிர்த்தருள வேணும்.**

*- திருப்பாவை 29*



# திருச்சானூர் தாயார் பஞ்சமி தீர்த்தம்

ஸ்ரீஹரி தவப்பயனின் காரணமாக திருச்சுகனூர் என்றழைக்கப்பட்ட திருச்சானூரில் கார்த்திகை மாதம், பஞ்சமி திதியில், பத்ம சரோவரத்தில் (தாமரை திருக்குளத்தில்), ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையில் பத்மாவதித் தாயார் அவதரித்தார். அந்த நன்னாளினை முன்னிட்டே பிரம்மோத்ஸவம் நடத்தப்படுகிறது. தாமரை மலர்களைத் தம் திருக்கரங்களில் ஏந்தி, பாஞ்சராத்ர ஆகமத்தின்படி பக்தர்களால் வழிபடப்பட்டு, திருச்சானூரில் கோயில் கொண்டு அருள் புரிந்து வருகின்றார். தயையே வடிவான ஸ்ரீபத்மாவதித்தாயாருக்கு எத்தனையோ உற்சவங்கள், ஊர்வலங்கள் நடந்தாலும் பிரம்ம உத்ஸவத்திற்குத்தான் தனிச்சிறப்பு. திருச்சானூரில் நடைபெறுகின்ற பஞ்சமி தீர்த்தத்திற்கு கோடானக்கோடி பக்தர்கள் திரண்டு வருவர். தாயாருக்கு திருக்குளக்கரையில் நடக்கும் திருமஞ்சனத்தைப் பார்த்து பரவசமடைந்து, மனதார அலர்மேல் மங்கைத் தாயாரைச் சேவித்து பஞ்சமி தீர்த்த புனித நீராடலை பக்தர்கள் மேற்கொள்வர்.

அன்றைய தினம் திருவேங்கடவன் தனது தர்ம பத்தினிக்கு திருமலையில் இருந்து அனுப்பிடும் துளசி, குங்குமம், மஞ்சள், பீதாம்பரமும், பலவிதமான பிரசாதங்களையுமம் யானைகளின் மீது ஸ்ரீவைஷ்ணவ ஏகாங்கி கொண்டு வந்து ஆலய மரியாதைகளோடு திருச்சானூரில் அர்ச்சகர்களிடம் கொடுப்பர். பத்ம சரோவரத்தில் நீராட்டலுக்கு உற்சவ மூர்த்தியானத் தாயார் பத்மசரோவரக் குளக்கரையில் சுதர்ஸனாழ்வாரோடு திருமஞ்சனம் கண்டு திருக்காட்சி அளிப்பார். கார்த்திகை பஞ்சமி நாளன்று பத்மசரோவரத்தில் சக்கரஸ்நானம் நடைபெறும் வரை ஸ்ரீநிவாசனுக்கு வழிபாடு நடைபெறாது. இங்கு நடத்தப்படும் திருமஞ்சனம் தரிசித்த பக்தர்கள் மஞ்சள் குங்குமத்தோடு நீடூழி வாழ வழி வகுக்கும். சக்கர ஸ்நானத் திற்குப் பிறகு பக்தர்கள் பத்மசரோ வரத்தில் நீராடி பஞ்சமி தீர்த்தத்தின் பலனை, பல கோடி ஜன்ம புண்ய பலனைப் பெறுவர்.










வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்


டிசம்பர் 2024

மலர் 04
இதழ் 05


## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| சமநோக்கு கீதை | -திரு.அ.ஜ.ரங்கராஜன், விருகம்பாக்கம். | 7 |
| தாயுள்ளம் | - திரு. எஸ். ராமாநுஜன், பெங்களூரு. | 10 |
| மணிக் (மனக்) கதவம் தாள் திறவாய் | - திரு. வி.பி. அர்த்தனாரி, கோவை. | 15 |
| பாணர்குலத் திருவே சரணம் | - முனைவர் ந. மைதிலி, சென்னை. | 16 |
| திருவேங்கடவனின் திருலீலை | - திரு. வி.பத்மநாபன், செங்கல்பட்டு. | 19 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: அதிரதன்–சல்லியன் | - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 20 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் | - திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. | 22 |
| செந்தாமரை தந்த செய்யாள் | - திரு. ஆர். ஸ்ரீராமன், பெருங்களத்தூர். | 24 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: அனுமனின் விஸ்வரூப சிறப்பு | -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 31 |
| பழம்பெரும் திருவிழா கார்த்திகை தீபத்திருவிழா | - திரு. பனையபுரம் அதியமான், சென்னை. | 34 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருப்புட்குழி | - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 39 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் | - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 43 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் | - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 44 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் | - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 46 |
| ராசிபலன்கள் : டிசம்பர் 2024 | - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவை பகுதி | | 49 |
| சித்திரக்கதை : சிறந்த கொடைவள்ளல் | | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீகிருஷ்ணர் அலங்காரத்தில் திருமலையப்ப ஸ்வாமி.

பின்னட்டை : ஸ்ரீஆண்டாள் தாயார், ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி திருக்காயில், திருப்பதி.


சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. P. ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்



# திருமலையில் திருப்பாவை

கலியுகக் கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானுக்கு நாள்தோறும் அதிகாலையில் "சுப்ரபாதம்" தொடங்கி, இரவு "ஏகாந்த சேவை" வரை எண்ணற்ற உத்ஸவங்கள் நடைபெற்று வருகின்றன. இவை மட்டுமின்றி நித்யோத்ஸவம், வாரோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாசோத்ஸவம், வருடாந்திர உத்ஸவம் என மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

இங்ஙனம் எண்ணற்ற பல உத்ஸவங்கள் நடைபெற்று வந்தாலும் தினமும் ஸ்ரீமணவாள மாமுனிகளின் சீடரான பிரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிய "கொசல்யா சுப்ரஜா ராமா! பூர்வா சந்த்யா பிரவர்ததே" எனும் சுப்ரபாதத்தினைப் பாடி வேங்கடவனைத் துயிலெழுப்புவர். இந்த சுப்ரபாத சேவையானது மார்கழி மாதத்தினைத் தவிர வருடத்தின் அனைத்து நாட்களிலும் நடைபெற்று வருகின்றது. மார்கழி மாதம் மட்டும் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் அருளிச் செய்த "திருப்பாவை"பாசுரங்களால் துயில் எழுப்புவர்.

திருவில்லிபுத்தூரில் விஷ்ணுசித்தர் எனப் போற்றப்படும் பெரியாழ்வாரால் துளசி வனத்தில் கண்டெடுக்கப்பட்டவள் கோதை. உலகெலாம் வியக்கும்படியாக கண்ணன் எம்பெருமானிடத்தில் பெருங்காதல் கொண்டாள். எப்பொழுதும் அப்பெருமானின் பெருமைகளை நினைத்தும், துதித்தும் வந்தாள். வடப்பெருங் கோயிலுடையானுக்கு சாத்துவதற்காகக் கட்டி வைத்த மாலையைத் தான் சூடிக் கொள்வாள். அவளுடைய பக்திப் பெருங்காதலானது "மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" எனும் படியான உறுதி கொண்டதாய் இருந்தது.

இராசக்கிரீடை செய்த பின்னர் கிருஷ்ணரைப் பிரிந்த இடைப்பெண்கள் தங்களை கிருஷ்ணனாகவே எண்ணி கொண்டு வாழ்ந்தார்களாம் என்று பாகவதம் தசம ஸ்கந்தம் கூறும். இதனைக் கேட்ட ஆண்டாளும் திருவில்லிபுத்தூரை திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப் பெண்களாகவும், தன்னை அவர்களில் ஒருத்தியாகவும், வடப்பெருங்கோயிலை நந்தகோபன் திருமாளிகையாகவும், வடப்பெருங் கோயிலுடையானை ஸ்ரீகிருஷ்ணனாகவும் பாவித்தாள். திருவாய்ப்பாடியில் இடைப்பெண்கள் நோற்ற நோன்பினைத் தானும் நோற்றாள். வேதங்கள் அனைத்திற்கும் வித்தான திருப்பாவையைப் பாடியருளினாள்.

108 திவ்ய தேச எம்பெருமான்களையும் தம் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்த ஆழ்வார்களில் பதின்மர் திருவேங்கடத்தையும், அம்மலையில் அருளாட்சி புரியும் திருவேங்கடவனையும் போற்றி உள்ளனர். அவர்களில் "அஞ்சுகுடிக்கு ஓர் சந்ததியாய்" எனப் போற்றப்படும் ஆண்டாளும் திருவேங்கடவனைப் போற்றியுள்ளாள்.

"வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே"

என்று ஆண்டாள் பிரார்த்தித்ததை உணர்ந்த பகவத் இராமாநுஜர் திருமலையில் "திருப்பாவை" பாசுரங்களை மார்கழியில் அனுசந்திக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தார். இராமாநுஜர் ஆண்டாள் மீதும் , அவள் பாடி அருளிய திருப்பாவை பாசுரங்கள் மீதும் பக்தியும் பிரபத்தியும் கொண்டிருந்தார். ஆதலால் "திருப்பாவை ஜீயர்" என்றும் போற்றப்பட்டார். இராமாநுஜரின் கட்டளையின்படி திருமலையில் மார்கழி மாதத்தில் சுப்ரபாதத்திற்குப் பதிலாக ஜீயர் சுவாமிகள் மற்றும் ஏகாங்கிகள், ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களால் "திருப்பாவை" ஏகாந்தமாக அனுசந்திப்படுகிறது. இந்த மார்கழி மாதம் முழுவதும் திருவேங்கடமுடையானை ஸ்ரீகிருஷ்ணராகப் பாவித்து அர்ச்சகர்களும் பூஜைகள் செய்திடுவர்.

ஈரேழு லோகங்களுக்கும் மேலானதான இந்த ஏழுமலையில் ஆனந்த நிலையத்தில் கொலுவீற்று அருளாட்சி புரியும் ஏழுமலையவாசனுக்கு மார்கழி மாதம் நடைபெறும் உத்ஸவங்களைத் தரிசித்து ஆண்டாளின் அருளைப் பெறுவோம்.

மார்கழி நோன்பினை கடைபிடிப்போம்!
மாதவனின் அருளினைப் பெற்றிடுவோம்!!





# சமநோக்கு கீதை

ஸ்ரீமத் பகவத் கீதையில் "சமநோக்கு உள்ளவன் மிகவும் சிறந்தவனாகக் கருதப்படுகிறான்" என எடுத்துரைக்கப்பட்டு உள்ளது. ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீராமனுக்கு முடிசூட்டு விழாவிற்கு முந்தைய தினம் அனைத்து ஏற்பாடுகளையும் அயோத்தியில் தசரதனின் ஆணைப்படி செய்து கொண்டிருந்தனர். ஆனால் அதே தசரதன் பின்னர் மனைவி கைகேயியின் சொல்லைக் கேட்டு பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவும், ஸ்ரீராமனை பதினான்கு ஆண்டுகள் கானகத்துக்கும் அனுப்பி வைத்தார்.

இந்த திடீர் முடிவினால் ஸ்ரீராமர் எந்தவித பாதிப்பும் அடையாமல் இருந்தார். அவர் கானகத்தையும், அரசாட்சியையும் ஒன்றாகவே கருதி மகிழ்வுடன் மரியாதையுடன் ஏற்றுக் கொண்டார். ஆனால் பரதன் ஸ்ரீராமனிடம் அணுகி, "தாங்கள் உடனே வீட்டிற்கு வர வேண்டும். நான் உங்களுக்குப் பதிலாக வனவாசம் செல்வேன்" என்றார்.



ஆனால் ஸ்ரீராமர், "எனக்கு வனவாசமும், அரசாட்சியும் ஒன்றே. நான் வனவாசம் செல்லாமல் அயோத்திக்கு வந்தால் நாம் இருவரும் நம் தந்தைக்குக் கீழ்ப்படியாமல் இருப்போம். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. நம் பிதா சொல்லியவாறு பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்கிறேன். அவர் ஆணைப்படி நீ மட்டுமே அரசாள வேண்டும். எனக்கு எல்லாம் ஒன்றுதான். சமமாக எல்லாவற்றையும் பாவிப்பதால் என்றும் நல்லது. மேலும் தந்தை இட்ட கட்டளை என்றுமே நல்லதற்கு மட்டுமே. எனவே எனக்குப் பதிலாக நீ பதினான்கு ஆண்டுகள் ஆட்சி செய்யலாம்" என்றார். உடனே பரதன், தங்களின் கட்டளைக்கு எதிராக என்னால் எதுவும் செய்ய முடியாது என்று பதிலளித்து, ஸ்ரீராமரின் பாதுகையைச் சிம்மாசனத்தில் வைத்து, 14 ஆண்டுகள் ஆட்சி செய்தார். எல்லாவற்றிலும் சமநோக்கு கொண்டவர் ஸ்ரீமந்நாராயணன். இதனை வலியுறுத்தும் வகையில் ஸ்ரீமத் பகவத் கீதையில் சம நோக்கு பற்றிப் பல இடங்களில் அறியலாம். குறிப்பாக

– திரு.அ.ஜ. ரங்கராஜன், விருகம்பாக்கம், 9445105470.

(6–7) *''பரமாத்மா ஸமாஹிதா: சீதோஷ்ண சுக து:கேஷு''* என தட்ப வெப்பம், இன்பம் துன்பம், மானம் அவமானம் எல்லாவற்றிலும் யாருடைய மனநிலை மிக அமைதியாக உள்ளதோ, தன்னை அடக்கி வெற்றி அடைந்த அந்த மனிதனின் ஞானத்தில் சத்சித் ஆனந்த மயமான பரமாத்மா நன்கு நிலை பெற்று இருக்கிறார். அந்த மனிதனின் அறிவில் பரமாத்மா மட்டுமே இருக்கிறார். வேறு எதுவும் கிடையாது. இந்த வாசகங்களில் நமது நிலைமை எதிலும் சமமாக இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கிறது.

மேலும், கீதை 6–8இல் *''ஸமலோஷ்டாச்ம காஞ்சன:''* எவருடைய உள்ளம் ஞானத்தாலும், விஞ்ஞானத்தாலும் நிறைவு பெற்று இருக்கிறதோ, எவர் தம் நிலையில் எந்தச் சூழ்நிலையிலும் மாறாமல் உள்ளாரோ, எவர் புலன்களை அடக்கி வசப்படுத்தி இருக்கிறாரோ, எவர் எந்த மண், கல், பொன் எல்லாவற்றிலும் சம நோக்கு கொண்டுள்ளாரோ அந்த யோகி பரமாத்மாவை அடைந்தவர் என்று தெரிவிக்கிறது.

கம்ப இராமாயணத்தில் வாலியைப் பற்றிக் கூறும்போது, பகவான் வாலிக்கு நேரே தோன்றினார். அப்போது வாலி *''மூலம் நீ முதல்வன் நீ முற்றும் நீ மற்றும் நீ பாவம் நீ தர்மம் நீ பகையும் நீ உறவும் நீ''* என்று ஸ்தோத்திரம் பாடியதாக உள்ளது. உயிர் போகும் நேரத்தில் பரமன் புகழ் பாடினதால் பரமாத்மா நல்ல கதியை அருளினாராம். பரமாத்மாவிற்கு துஷ்டர் சிரேஷ்டர் என பேதம் இல்லை. எம்பெருமானை சரணடைந்து விட்டால் அவர் பக்தர்களிடம் எந்த வேறுபாடும் பார்ப்பது இல்லை. எனவே நமது கடமை என்றுமே அவனை வேண்டி பாகுபாடு இல்லாமல் அருளினை அடைவதே ஆகும்.

தன்னலம் இன்றி யாவருக்கும் நன்மை புரிபவன், நண்பன், பகைவன், உதாசீனன், நடுநிலை வாசி, உறவினன், வெறுக்கத் தக்கவன், நல்லவன், பாவிகள் அனைவரிடமும் சம நோக்குடன் செயல்பட கீதையில் பல சுலோகங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவன் பகைவனிடமும், நண்பனிடமும், மதிப்பிலும், அவமதிப்பிலும் சம புத்தியுடன் செயல்படுகிறானோ அவ்வாறே தட்ப வெப்பம், சுக துக்கம் இரண்டிலும் சமபுத்தி உடையவன், பற்று அற்றவன் எனக்குப் பிடித்தமானவன் (கீதை 12–18).

இகழ்ச்சியிலும், புகழ்ச்சியிலும் சமமாக நோக்குபவனை, பகவத் சிந்தனை எப்போதும் உள்ளவனை, எவ்விதத்தில் உடலைப் பேணுதல் நடந்தாலும் மகிழ்ச்சி கொள்பவனை, தான் தனது என்ற பற்று இல்லாதவனை, நிலைத்த புத்தி கொண்டவனை, பக்தி நெறி உள்ளவனை என்னுடைய பிரியமானவர்களாகச் சொல்வேன் (கீதை 12–19).

எவன் தன் நிலையான ஆத்ம ஸ்வரூபத்தில் இடையூறு இன்றி நிலைத்து நிற்கிறானோ, இன்ப துன்பங்களை சமமாகக் கருதுவானோ, மண், கல், பொன் எல்லாவற்றையும் சமமாக நினைப்பானோ, வேண்டும் வேண்டாம் என்ற இரண்டையும் ஒன்றாக நினைப்பானோ, இகழ்ச்சி புகழ்ச்சி இரண்டையும் ஒன்றாகக் கருதுவானோ அவனை நல்லவனாகச் சொல்லலாம்(கீதை 14–24). அவ்வாறே பெருமை சிறுமையைச் சமமாகக் கருதி, நண்பர், பகைவர் இருவரையும் ஒரே மாதிரி பார்ப்பவனின் செயல்களை நான் தான் செய்கிறேன் என்ற மனப்பான்மை இல்லாதவனை அந்த மனிதன் மூன்று குணங்களை கடந்தவனாகக் கூறப்படுவான்(கீதை 14–25 ).

விரும்பிய பொருளை அடையும் போது மகிழ்ச்சி அடையாமலும், விரும்பாததை அடையும் போது வருத்தமோ கலக்கமோ இல்லாமலும், இருக்கும் நிலைத்த மதி உடைய ஐயம் நீங்கிய ஞானி பரமாத்மாவில் எப்போதும் ஒன்றி நிலைத்து நிற்பார்கள்(கீதை 5–20).

தத்வஞானிகள் கல்வியோடும் பணிவோடும் கூடிய பிராம்மணனிடமும், பசுவிடமும், நாயிடமும், யானையிடமும், சண்டாளனிடமும் கூட சமநோக்கு உடையவர்களாவர்(கீதை 5–18).

எப்போது மனிதன் மனதில் உள்ள ஆசைகளையும் அறவே துறக்கிறானோ, ஆத்மாவினால் ஆத்மாவிடமே ஆனந்தமாக இருக்கிறானோ அப்பொழுது அவன் ஸ்திதப்ரக்ஞன் எனக் கூறப்படுவான் என்கிறார் ஸ்ரீகிருஷ்ணர் (கீதை 2–55). எனவே நமது பக்தியின் மூலம் மட்டுமே சாத்தியப்படுவது உறுதியான மனக் கட்டுப்பாடும், அதற்கு உறுதியான மனநிலையும் தேவை என்று சொல்லலாம். அந்த பக்திக்கு ஏழு முன் அம்சங்கள் உள்ளன.

1) விவேகா – சாத்வீக குணம் கொண்டு உடலை சுத்தப்படுத்துதல்

2) விமோகா – ஆசைகளை முற்றிலும் துறத்தல், செய்த செயல்களின் பலனைப் பற்றி கவலைப் படாமல் இருத்தல்.

3) அபியாஸ – முழு அர்ப்பணிப்புடன் ஸ்ரீமந் நாராயணனை அடிக்கடி வழிபடுதல்.

4) க்ரியா – பரிந்துரைக்கப்பட்ட வகை விதி முறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப சரியாக வேலை செய்தல்.

5) கல்யாண – உண்மை, நேர்மை, கருணை, அஹிம்சை போன்றவற்றைப் பின்பற்றுதல்

6) அனுதர்சா – மகிழ்ச்சி மற்றும் துக்க உணர்வு களைத் தவிர்க்கும்.

7) ஸ்தித பிரக்ஞன் – நிலையான தன்மை, எல்லோரும் பகவத் சரணார விந்தத்தை நோக்கமாக கொள்ளவேண்டும். மேலும் சாமான்ய விஷயங்களில் பற்று ஏற்பட்டால் கோபம், வெறித்தனமாய் திருட்டு போன்றவற்றிற்கு மனம் செல்லக்கூடும். எனவே எல்லாம் நல்லதற்கே என்ற பாவனையில் வாழ்க்கை நடத்தினால் என்றுமே சிறப்பாகும்.




**திருமாலின் திருக்கரங்களில் சங்கும் சக்கரமும் என்றும் இருப்பதை நாம் காண்கிறோம். எம்பெருமான் திருக்கரத்தில் விளங்கும் சக்கரத்தையே சுதர்சன சக்கரம் என்று கூறுகிறோம். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் சுதர்சன ஆழ்வார், சக்கரத்தாழ்வார் என்று கொண்டாடுகிறோம். பெரும்பாலும் விஷ்ணு ஆலயங்களில் சக்கரத்தாழ்வாருக்கு தனி சன்னதியும் உண்டு. சக்கரத்தாழ்வார் பதினாறு ஆயுதங்களை திருக்கரத்தில் ஏந்தி பக்தர்களுக்கு அருள்புரிகிறார். பதினாறு திவ்ய ஆயுதங்களாவன : சக்கரம், மழு, ஈட்டி, தண்டம், அங்குசம், சதமுக அக்னி, கத்தி, வேல், சங்கம், வில், பாசம்(கயிறு), கலப்பை, வஜ்ரம், கதை, உலக்கை, சூலம் ஆகியவையாகும். திருமாலின் திருக்கரத்தில் உள்ள சக்கரமும், சக்கரத்தாழ்வாரின் திருக்கரங்களில் உள்ள 16 ஆயுதங்களும் பக்தர்களைக் காத்து ரக்ஷிக்கின்றன.**

**சுதர்சன பெருமாளைப் பற்றிய ஸ்ரீசுதர்சநாஷ்டகம் என்னும் எட்டு சுலோகத்தில் திருமாலின் சுதர்சன சக்கரத்தின் பெருமைகளை ஸ்ரீவேதாந்த தேசிகர் பாடியுள்ளார். எதிரிகளுக்கு பயங்கரமாயிருப்பவர், வேதங்களால் போற்றப்படுபவர், உலகின் நிலைப்பாட்டிற்குக் காரணமாக இருப்பவர், ஆபரணமாக பெருமாள் திருக்கரத்தில் விளங்கி எம்பெருமானுக்கு அழகு சேர்ப்பவர். பிரம்மன் முதலிய தேவர்களால் போற்றப்படுபவர், எம்பெருமானுக்கு பலவகையிலும் துணை புரிபவர், நம்மைப் போன்றோர் சம்சார பந்தம் நீங்கி மோட்சம் பெற வழி வகுப்பவர், யந்திர வடிவில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பவர், உலகத்தின் அச்சத்தை நீக்குபவர் என்று இந்த சுலோகங்களில் சக்கரத்தாழ்வார் துதிக்கப்படுகிறார்.**

**திருமலை பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் சக்கர தீர்த்தம் அமைந்துள்ளது. பிரம்மாவின் வேண்டுதலின்படி, ஸ்வாமி ஸ்ரீமந்நாராயணனான திருவேங்கடவனின் வலது திருக்கரத்தில் உள்ள சுதர்சனம் என்கிற சக்கரம் வந்து அருளியதால் இந்தத் தீர்த்தம் சக்கர தீர்த்தம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இங்கு நீராடினால் சுதர்சன சக்கரத்தின் அருள் முழுமையாகக் கிட்டும் என்பது நம்பிக்கை.**

# தாயுள்ளம்

திருப்பதி செல்லும்போது முதலில் திருச்சானூர் சென்று அலர்மேல் மங்கைத் தாயாரை சேவித்து விட்டு பிறகு திருமலை சென்று திருவேங்கடத்து எம்பெருமானை சேவித்தால் எம்பெருமானின் முழுமையான கருணைப் பார்வை நம் மீது பட்டு நம்மைக் காக்கும் என்பது நம் முன்னோர்கள் நமக்குச் சொல்லி வைத்துள்ள பாதுகாப்புக் கவசம்.

இதற்கு எளிமையாக ஒரு அழகான கதையை நம்முன்னோர்கள் சொல்வர்.

“ஒரு புல்வெளிப் பகுதியில் முயல் குட்டிகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. தாய் முயல் தூரத்தில் உள்ள நல்ல புல்வெளியைத் தேடி அங்கிருக்கும் புல்லைக் கவ்விக் கொண்டு குட்டிகள் விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தது. ஆனால் அங்கு குட்டிகளைக் காணவில்லை. அவற்றின் அழுகுரல் மட்டும் கேட்கிறது.

அப்பொழுதுதான் தெரிந்தது. அவ்வழியாக வந்த வேடன் ஒருவன் முயல் குட்டிகளை கோணிப் பையில் போட்டு கட்டி வைத்து இருக்கிறான். அதிலிருந்து தான் அவை அழுகின்றன என்று தெரிந்து கொண்டது.

அந்த வேடனின் கோணிப் பையிலிருந்து குட்டிகளின் அழுகுரல் களைக் கேட்ட தாய் முயல் வேடனையும், அருகில் இருந்த அவன் மனைவி யையும் பார்த்தது. அவர்களிடம் சென்ற முயல் முதலில் வேட னின் கால்களைப் பிடித்துக் கொண்டு தன் குட்டிகளை விட்டு விடுமாறு கண்களிலிருந்து



கண்ணீர் வழிய கெஞ்சியது. வேடன் அந்தத் தாய் முயலின் கெஞ்சலை காதில் போட்டுக் கொள்ள வில்லை.

அந்தத்தாய் முயல் அங்கு நின்றிருந்த வேடனின் மனைவியின் கால்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டது. அந்த வேடனின் மனைவிக்குப் புரிந்து விட்டது. அவளுடைய தாய்மை என்னும் தயை அந்த முயலின் தாய்ப் பாசத்திற்குக் கட்டுப்பட்டது.

அவள் தன் கணவனிடம் அந்தக் குட்டிகளை அந்தத் தாய் முயலுடன் விட்டு விடும்படி கேட்டுக் கொண்டாள். வேடன் விட மறுத்தான். அவள் கண்கள் பனித்திருந்தன. மனைவியின் கண்களில் கண்ணீர் வழிவதைப் பார்த்த வேடன் முயல் குட்டிகளை பையிலிருந்து விடுவித்தான்.

பிறகு அவர்கள் இருவரும் அருகில் இருந்த இளந்தளிர் புல் கற்றைகளை யும், மரத்திலிருந்து காய் கனிகளை யும் பறித்து அந்த முயல் குடும்பத் திற்குத் தந்த போது தாய் முயல் அவர்களை கைகுவித்து சேவித்து நன்றி தெரி வித்தது. அதைப் பார்த்த முயல் குட்டிகளும் கை குவித்து சேவித்து தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டன. வேடனும், அவன் மனைவியும் அவற்றைத் தடவிக் கொடுத்து, அவற்றை மகிழ்ச்சியுடன் விளையாட விட்டுச் சிரித்து மகிழ்ந் தார்கள்.

அந்த வேடனின் மனைவி சொன்ன வார்த்தைக்குக் கட்டுப்பட்ட அந்த வேடனே அந்த முயல்

குடும்பத்தை விடுதலை செய்து அவற்றைத் தன் குழந்தைகளாகப் பாவிக்கிறான்.

அப்படியிருக்க அகில உலகங்களுக்கும் தாயாரான அலர்மேல் மங்கைத்தாயாரின் திருவடிகளில் சரணடையும் குழந்தைகளான (அடியார்கள்) நம் கோரிக்கைகளை கேட்டுத் தன் நாயகனான எம்பெருமான் திருவேங்கடவனிடம் பரிந்துரைப்பாள்.

சரணாகதியை எப்படிச் செய்ய வேண்டும் என்று அந்த முயலுக்கு யாராவது சொல்லிக் கொடுத்திருக்கிறார்களா? இல்லையே. அந்தக் குட்டிகள் தன் குழந்தைகள். அவற்றைக் காப்பது தன் கடமை என்று நினைப்பது தாயின் இயற்கையான உள்ளம்.

“அடைக்கலம்” என்றால் என்னவென்றே அறியாத ஒரு வேடுவச்சி ஒரு முயலுக்காகத் தன் கணவனிடம் பரிந்து பேசி கருணை காட்டுகிறாள் என்றால் இந்த உலகங்கள் அனைத்திற்கும் தாயான தாயாரின் திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளான நம்மைக் காப்பாற்றுவதில் அவளுக்கு இணை அவளே!

அதனால்தான் “பெருமாள் கோயில்களுக்குச் செல்லும் போது முதலில் ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரை சேவித்து விட்டு பிறகு பெருமாளைச் சேவிக்க வேண்டும்” என்று சொல்வார்கள்.

**– திரு. எஸ். ராமாநுஜன், பெங்களூரு,**
**9886642690.**



# பாவை நோன்பின் நோக்கமும் திருப்பாவையின் முடிந்த பொருளும்

ஆழ்வார்களின் பக்தியையும், பெரியாழ்வாரின் பக்தியையும் ஒப்பு நோக்குங்கால் மற்றையோர் பக்தி அணுவளவாகவும், பெரியாழ்வாரின் பக்தி மலையளவாகவும் தோன்றுமாம். ஆனால், பெரியாழ்வார் பக்தியையும் அவர்தம் திருமகளார் ஆண்டாளின் பக்தியையும் ஆராய்ந்து பார்த்தால் பெரியாழ்வாரின் பக்தி அணுவளவாகவும், ஆண்டாளின் பக்தி மலையளவாகவும் அமையுமாம். இது என்ன விந்தை! இது என்ன வேடிக்கை!

இறைவன் ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலம் அருளினான். அதாவது ஆழ்வார்கள் சம்சாரத்தில் மூழ்கிக் கிடந்து, உறங்கி இருக்க எம்பெருமான் தானாக வந்து அவர்களை உணர்த்த பின்னர் அவர்கள் உணர்ந்து எழுந்தனர். எனவே ஆழ்வார்கள் ஒரு படி உயர்ந்தவர்கள் தான். அந்த ஆழ்வார்களில் பொங்கும் பரிவாலே எம்பெருமானுக்கே பல்லாண்டு பாடினபடியினால் பெரியாழ்வார் ஒரு படி உயர்ந்தவரானார். இப் பெரியாழ்வாரைக் காட்டிலும் ஆண்டாள் எம்பெருமான் பக்கலில் ஆராதக் காதல் கொண்டு, இவள் தானே பகவான் இடத்தே சென்று, “உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்”, “கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்”, “வெப்பம் கொடுக்கும் விமலா துயி லெழாய்” என அவ்வெம்பெருமானைத் துயில் உணர்த்தினபடியால் பெரியாழ்வாரை விட ஒருபடி உயர்வானவளாக ஆண்டாள் பேசப்படுகிறாள். ஆக, ஆழ்வார்களைக் காட்டிலும் ஆண்டாளுக்கு எம்பெருமானிடத்தே பரமபக்தி அதிகம். அவள் இயற்றிய திருப்பாவை பிரபந்தமோ பரமபக்தியை வெளிக் கொணர்வது.

பரம பக்தியாவது எம்பெருமானிடத்தே சென்று, “உனக்கு அடிமையாகிய இந்த ஆத்மா வேறு பயனை விரும்பாதபடி பண்ணி, இந்த ஆத்மாவுக்கு அநுகுணமான குற்றேவல்களைக் (கைங்கர்யம்)கொடுத்து, அது வேறு பொருளை அடையா வண்ணமும் பண்ணியருள வேணும்” என்பதேயாகும். இதுவே இம்மார்கழி மாத நோன்பின் நோக்கமும், திருப்பாவையின் முடிந்த பொருளுமாகும்.




# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| **புத்தகத்தின் பெயர்:** | | **ஆழ்வார்கள் அனுபவித்த கஜேந்திர மோக்ஷம் மற்றும் கஜேந்திர மோக்ஷ ஸ்தவம் (பொழிப்புரையும் விசேஷவுரையும்)** |
| **ஆசிரியர் பெயர்** | : | **டாக்டர் மாடபூசி வரதராஜன்.** |
| **விலை** | : | **ரூ.150/-** |
| **கிடைக்குமிடம்** | : | **எண்.19/37, 2வது தளம், கிருஷ்ண மந்திரம் அருகில், சுங்குவார் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.** |
| **தொடர்பு எண்** | : | **98418 84972.** |

நாம் அநுதினமும் துதிக்க வேண்டிய ஸ்தோத்ரங்களுள் கஜேந்த்ர மோக்ஷ ஸ்தவமும் ஒன்று. இது ஸ்ரீமத்பாகவதத்தில் எட்டாவது ஸ்கந்தத்தில் ஸ்ரீசுகமஹர்ஷி அருளியதாகும். ஸ்ரீமத் பாகவதத்தின் வடமொழி வ்யாக்யானமான ஸ்ரீ உ.வே. வீரராகவார்யரின் சந்த்ரிகாவையும், ஸ்ரீ உ.வே. ஆ.வீ. நரஸிம்மாசாரியாருடைய மணி ப்ரவாள உரையையும் தழுவி பொழிப்புரையும் விசேஷவுரையும் எழுதியுள்ளார் இவ்வாசிரியர் டாக்டர் மாடபூசி வரதராஜன். இந்நூல் ஆசிரியரின் 91வது வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கதாகும். முதற்கண் இந்நூலில் கஜேந்த்ர மோக்ஷ வ்ருத்தாந்தத்தை ஆழ்வார்கள் அனுபவித்த ப்ரகாரமாய் செய்து, பின்னர் மூலநூலான கஜேந்த்ர மோக்ஷ ஸ்தவத்துக்கு பொழிப்புரையும் அமைத்து வெளியிட்டுள்ளார் இவ்வாசிரியர்.

இந்நூலின் முதல் கட்டுரையில் ஆசிரியர் தம் ஆசார்யர் திறத்து கண்டு, கேட்டு, உண்டு, மோந்து, இன்பம் என்னலாம்படி அனுபவித்த அனுபவங் களைக் கொண்டு ஆறு தலைப்புகளில் பொருட் சுவையும் அருட்சுவையும் நிறைத்துத் தந்துள்ள பாங்கு படிக்கும்தோறும் தேனூறி எப்பொழுதும் தித்திக்குமே. ஆழ்வார்கள் அனுபவித்த இந்த வ்ருத்தாந்தத்தை நிர்வஹித்தருளும் ஆசார்யர் களின் ஸ்ரீஸூக்திகளையும், மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளையும், ஒருங்க விட்டு வாசகர்களுக்கு படைக்கப்பட்டவிதம் இமயப் பெருமலைபோல் இந்திரனாற்கிட்ட சமய விருந்துக்கு ஒப்பாகும்.

கஜேந்திரமோக்ஷ ஸ்தவத்தில் 8–2, 8–3, 8–4 ஆக மூன்று அத்யாயங்களில் உள்ள ச்லோகங்களுக்கு பொழிப்புரையும் விசேஷவுரையும் தந்து ஆங்காங்கு ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலுள்ள இந்த வ்ருத்தாந்தத்துக்குச் சேர நிற்கும் திருநாமங்களையும் சூசிப்பித்தமை இங்கு நோக்கத் தக்கது. இந்த ஸ்தவத்தை பாராயணம் செய்வதன் பலனைச் சொல்லித் தலைக்கட்டுங்கால் இக் கஜேந்த்ர மோக்ஷ சரிதத்தை சிந்தையாலும் சொல்லாலும் கேட்பதனாலும் எல்லாப் பாவங்களும் நீங்கப்பெறுவர் என்றும், இது பற்றியே எம்பெருமானுக்கு "புண்யச்பவண கீர்த்தந:" என்ற திருநாமம் ஏற்பட்டது என்றும் உணர்த்தியிருப்பது மலக்கு நாவுடையோர்க்கு மாறுளதோ இம்மண்ணின்மிசையை எனலாம்.

**- திரு. டி.எம். வீரராகவன், சென்னை.**

**வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...**

**திருமலை மலைவழிச் சாலையில் வாகனம் ஏறும் பொழுது 28 நிமிடத்திற்கு முன்னதாக ஏறினாலும், இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக இறங்கினாலும் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.**

ஆயர்பாடியின் வைகறைப் பொழுது. எல்லோரும் எழுந்து விட்டார்கள். ஆனால் ஒரு கோபிகை மட்டும் இன்னும் உறங்கிக் கொண்டே இருக்கிறாள். எழுந்தபாடில்லை. அவளுடைய தோழிகள் எல்லோரும் வாசலுக்கு வந்து விட்டார்கள். இந்த மார்கழி மாதத்தில் எல்லோரும் சேர்ந்து நீராடி பாவை நோன்பு நோற்க வேண்டும். அதுதான் நியதி. அப்படி இருக்க அவள் ஒருத்தியை மட்டும் விட்டு விட்டுப் போக முடியாது? அவளையும் எழுப்பிக் கூட்டிக் கொண்டு தான் போக வேண்டும். ஆகவே அவளுடைய தோழிகள் அனைவரும் அவள் வீட்டு வாசற்படியில் வந்து நின்று கொண்டனர்.

நன்றாக உறங்குகின்ற தோழியின் வீட்டை ஆண்டாள் வருணிக்கிறாள்.

அந்த வீடு சாதாரண வீடு அல்ல. வீட்டின் நாற்புறமும் மாடங்கள் வைத்துக் கட்டியிருக்கிறார்கள். அம்மாடங்களில் எப்போதும் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வாயிற்படி மூலையின் இருபுறமும் விளக்குகள் மாடங்களில் ஒளி விடுகின்றன. ஒளி வீசக் கூடிய மணிகளை – இரத்தினக் கற்களை அழுத்தி மாடங்களைச் சுற்றிப் பதித்து மாடங்களை அழகு செய்திருக்கின்றனர். விளக்குகளின் தீப ஒளி சுற்றிலும் பதிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் மீது பட்டு அவைகளை மேலும் ஒளி பெறச் செய்கிறது. வீட்டின் ஒவ்வொரு வாயிற்படியும், மாடமும் இது பெரிய செல்வந்தர் வீடு என்பதைப் பார்த்த உடனேயே சொல்லி விடலாம். இப்படிப்பட்ட மாளிகை வீட்டில் தான் அந்தப் பெண் கவலையில்லாமல் உறங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் செல்வந்தருடைய மகள் மட்டுமல்ல. செல்லப் பெண்ணும் கூட! இவள் வாழுகின்ற வீடு பெரிய மாளிகை. ஆகவே தான் தூமணி மாடத்தில் எப்போதும் விளக்குகள் எரிந்து கொண்டு இருக்கின்றன.




அது மட்டுமல்ல; வீட்டுக்குள்ளே இருந்து அகிலும் சந்தனமும் மணக்கும் புகையும் காற்றோடு கலந்து தெருவுக்கும் வந்து விடுகிறது. அச்செல்வந்தரின் மகள் கண்ணனிடம் தீவிர பக்தி கொண்டவள். அப்படியானால் கண்ணனுடைய நினைவே இல்லாமல் எப்படி இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிறாள்? படுக்கை சுகம் போலும்! அன்னத் தூவியில் செய்யப்பட்ட மென்மையான மெத்தையில் சுகமாக கண் உறங்குகிறாள். அதனால்தான் இன்னும் எழுந்தபாடில்லை. “மாமன் மகளே! நீ மணிக்கதவம் தாள் திறவாய்!” என்று விளிக்கிறார்கள் வந்த தோழிகள். கதவையும் தட்டுகிறார்கள். ஆனால் எந்த சத்தமும் அவளுடைய காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

நம் உள்ளம் கூட இப்படிப்பட்ட ஒரு உல்லாச மாளிகை தான். அது எல்லா சுகங்களையும் தேடிச் செல்கிறது. சுகங்களைப் பெற்றதும் அதை அனுபவித்து அதிலேயே ஆழ்ந்து விடுகிறது. இப்படி உலக சுகங்களைத் தேடி அலைகின்ற மனம் தெய்வ சிந்தனை என்பதையே மறந்து விடுகிறது. மாயை என்னும் கதவு மனதை லௌகீக வட்டத்துக்குள்ளேயே அடைத்து விடுகிறது. கண நேரத்தில் அழிந்து போகும் நிரந்தரமற்ற சுகானுபவங்களை அனுபவிக்கின்ற மனம், நிரந்தரமான எல்லையில்லா பேரின்பத்தைத் தேடிப் போவதில்லையே. பகவானின் திருவடி நிழல் என்னும் பேரானந்தத்தில் ஒன்றுவது எப்போது?

மாயை என்னும் கதவு திறக்கப்படுமாகில் ஆன்ம ஜோதி வெளிப்படும். அங்கே இறைவனின் ஆனந்த திருவடிவினைக் காணலாம்.

அஞ்ஞான இருளில் உறங்கிக் கிடக்கும் நம் மனம் மாயை என்ற மணிக்கதவைத் திறந்து கொண்டு தெய்வ சிந்தனையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டால் கண்ணனைக் காணலாம் என்று ஆண்டாள் சொல்கிறாளோ இவ்வரிகளில்? சரி, கதவைத் தட்டியும் கூட இந்தப் பெண் எழுந்து வந்து கதவைத் திறந்த

## மார்கழி மூலத்தில் உதித்தவனே



மார்கழி மூலத்திலுதித்த சிவரூபனே
முக்கடவுளரும் போற்றும் சுந்தரனே
முக்காலத்தையு மறியும் வித்தகனே
மும்மலமகற்றிடுவாய் பஞ்சமுகனே

அஞ்சனை மடிதனில் தவழ்ந்தவனே
அனலிமேல் பழமெனப் பாய்ந்தவனே
அவதார ராமனுக்கு தூதனானவனே
ஆன்மபல மருள்வாய் ஆஞ்சநேயனே

அரக்கர் இலங்கைக்குப் பறந்தவனே
அசோக வனத்தே சீதை கண்டவனே
அலர்மகளிடம் மோதிரம் தந்தவனே
ஆயகலையருள்வாய் கேசரி மகனே!

சீதையின் சூடாமணி பெற்ற சீலனே
சீர்மல்க ராமனிடமதை தந்த தீரனே
சுபந்தரும் சிறிய திருவடியானவனே
சேவை சாதிப்பாய் இராம பக்தனே

வானளவு வால் வளர்த்த வானரனே
வஞ்சக அசுரர் செருக்கழித்தவனே
வாலினால் இலங்கை எரித்தவனே
வினைகள் தீர்ப்பாய் வீர அனுமனே

மங்கல ஆரத்தியில் திளைப்பவனே
மோன நிட்டையிலமர் ராமபக்தனே
மயில் இராவணனையழித்த வீரனே
மாசிலா வாழ்வருள்வாய் மாருதியே

வெண்ணை காப்பில் இன்புறுபவனே
வெற்றிலை மாலையில் மகிழ்பவனே
வடை மாலையில் மனங்களிப்பவனே
வணங்குவோவுமை வாயுமைந்தனே

கபாலியும் அரியுமெச்சும் பலவானே
காவியப்புகழ் சொல்லின் செல்வனே
குண்டலம் பூண்ட பொன்மேனியனே
கருத்தினில் உறைவாய் கதாயுதனே

- திரு. தி. சுவாமிநாதன், கோவை, 9013300706.

பாடில்லை. "மாமீ! நீங்களாவது அவளை எழுப்பக் கூடாதா? நாங்கள் கூப்பிடும் குரலுக்கு மறு மொழியாக ஏதாவது பதில் சொன்னால் என்ன? வாய் முத்து உதிர்ந்தா போய் விடும்? அல்லது அவள் என்ன காது கேளாத செவிட்டுப் பெண்ணா? அல்லது பெருந்தூக்கம் தூங்கும்படி யாராவது மந்திரம் போட்டு கட்டி விட்டார்களா? இப்படி இதில் ஏதாவது ஒன்று காரணமாக இருக்க வேண்டும். இல்லா விட்டால் நாங்கள் வந்திருக்கும் விவரம் தெரிந்தால் ஓடி வந்து எங்களை எதிர் கொள்ள மாட்டாளா? என்று ஒருவருக்கொருவர் சொல்லி மாமியை அழைக் கின்றனர்.

நாங்கள் நாராயணனின் நாமத்தைப் பல படியாக உரத்துச் சொல்லியபடி வந்து கொண்டிருக்கிறோம். அவனை மாமாயன் என்று புகழ்கிறோம். வியக்கத்தக்க செயல்களைச் செய்கிறான் கண்ணன். அவை மாயா ஜாலங்களாக நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. ஆகையால் அவனை மாயன் என்கிறோம்.

அது மட்டுமா? மாயை என்னும் பிரகிருதியைத் தனக்கு வசப்படுத்திக் கொண்டவன். மாயை அவனைக் கட்டுப்படுத்துவதில்லை. மாயைக்கு அப்பாற்பட்டவன் அவன். நாம் தான் மாயையால் கட்டுண்டு அலைக்கழிக்கப்படுகிறோம். நாம் அக் கட்டிலிருந்து விடுபட வேண்டுமாகில் அவனைச் சரணடைவதல்லால் வேறு உபாயமில்லை. தன்னைச் சரணடைந்தோரை மாயையிலிருந்து விடுபடச் செய்வானாதலால் அவன் மாமாயன் என்று போற்றப் படுகிறான்.

*தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா*
*மாவேவ யே ப்ரப்த்யந்தே மாயா மேதாண் தரந்திதே*

–பகவத் கீதை 7–14

இந்த முக்குண வடிவமான என்னுடைய மாயை தெய்வ சக்தி உடையது. தாண்டுவதற்கும் அரியது; எவர்கள் என்னைச் சரணடைகிறார்களோ அவர்களே மாயையைத் தாண்ட முடியும் என்கிறார் கண்ணன் கீதையில்.

மாயையிலிருந்து விடுபட்டால் அவனோடு ஒன்றிப் போவோம். அதுவே வைகுந்தப் பதவி. ஆகையால் அவனை வைகுந்தன் என்று வாழ்த்து வோம். பரம பதத்தை அளிக்க வல்லவன் அவனே.

இப்படியெல்லாம் மாதவனைப் புகழ்ந்து பாடியும் அவள் எழுந்து வரவில்லையே என்று ஏக்கம் கொள்கின்றனர் அவளுடைய தோழிகள். ஆகவே தான் மாமியைக் கூப்பிட்டு நீங்களாவது அவளை எழுப்புங்களேன் என்று வேண்டுகின்றனர்.

சாதாரணத் தூக்கத்திலிருந்து விடுபட்டு கதவைத் திறந்து எங்களோடு பாவை நோன்புக்கு வா என அழைக்க வந்த கோபியர்கள் கண்ணனின் திருநாமங்களை உரக்க உச்சரித்துத் தோழியை எழுப்ப முயல்கின்றனர். நம் மனமும் தாமச குணத் தாலும், ஆசை மயக்கத்தாலும் உறக்க நிலையில் தானே கிடக்கிறது. பகவானுடைய நாம சங்கீர்த்தனத் தால் நம் மனமும் அஞ்ஞான உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்ள வேண்டும். மனதின் கதவுகளைத் திறந்து கொண்டு ஆன்மா கண்ணனின் திருவடி களைச் சரணடைந்து அதில் ஒன்றிவிட வேண்டும்.

இதைத்தான் ஆண்டாள் தன் ஒன்பதாம் பாசுரத்தில் விவரிக்கிறாள்.

*தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய*
*தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்*
*மாமான்மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்!*
*மாமீர்! அவளை எழுப்பீரோ உன் மகள்தான்*
*ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?*
*ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?*
*மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
*நாமம் பலவும் நவின்றேலோர் எம் பாவாய்!*

**– திரு. வி.பி. அர்த்தனாரி, கோவை,**
**90033 60794.**

## திருவேங்கட கிருஷ்ணர்

**(முன் அட்டைப்பட பாசுர விளக்கம்)**

**ஸ்ரீகிருஷ்ணனே, பரம புருஷனே, உத்தம புருஷனே, புருஷோத்தமனே, பவித்திரனே பரமபதத்தையும் திருப்பாற்கடலையும் விட்டு பறவையேறி திருவேங்கடம் என்னும் உயர்ந்த சிகரத்தின் உச்சியில், குளிர்ந்த மலைப் பிரதேசத்தில் நீர் அருவிகள் கூடிய இயற்கை யான கண்ணுக்கினிய சூழ்நிலையில் திரு வேங்கடத்தில் அர்ச்சா அவதார மூர்த்தியாக எழுந்தருளியுள்ளான் என்று உலகிற்கு பெரியாழ்வார் உணர்த்துகிறார்.**


### ஆழ்வார்கள்

எம்பெருமான் நாராயணனை முழுமுதற் கடவுளாக வழிபடும் வைணவத்தாருக்கு ஊன்றுகோலாகத் திகழ்பவர்கள் ஆழ்வார்கள். அருளிச் செயல்கள் என்று போற்றப்படுவன இவர்களின் பாசுரங்கள். பக்தி நெறி ஒன்றே வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று உணர்ந்து உணர்த்தியவர்கள். பரம்பொருள் திருமால் ஒருவனே என்ற அசைக்க இயலாத நம்பிக்கை கொண்ட இவர்கள் பன்னிருவருள் ஒருவர் திருப்பாணாழ்வார்.

### திருப்பாணாழ்வார்

கார்த்திகை மாதம், ரோஹிணி நட்சத்திரத்தில் திருச்சிக்கு அருகிலுள்ள உறையூரில் அவதரித்தவர். தமிழ்நாட்டில் பாணர் என்போர் பழங்காலத்தில் யாழ் இசைப்பதில் சிறப்புற்று இருந்தவர்கள். யாழை வாசித்ததனால் அவர்களுக்கு யாழ்ப்பாணர் என்று பெயர் உண்டாயிற்று. இவர்கள் பண்டு, சமுதாயத்தில் நன்கு மதிக்கப்பட்டு அரசர்களிடத்திலும், செல்வந்தரிடத்திலும் ஆடல் பாடல் நிகழ்த்திப் பரிசு பெற்று வாழ்ந்தார்கள். பண்ணிசைத்தொழிலால் பாணர் எனப்பட்ட இவர்களின் புறவாழ்க்கையைப் புலப்படுத்துவன.

### பாணர் தம் மாண்பு



*''உம்பர் தொழும் மெய்ஞானத்து உறை யூரான் வாழியே''* என்பது அப்பிள்ளை என்பவரின் திருப்பாணாழ்வார் குறித்துச் சொல்லப் பட்ட பாடல்வரி. எடுத்த எடுப்பில் உம்பர் (தேவர்) தொழும் ஞானத்தான் என்று சொல்வதால் இம்பர் (மானுடர்) போற்றிச் சரண் அடைவதற்கு ஏற்றவர் என்பது பெறப்படும்.

### முனிவாகனன்

அடுத்து, *''வம்பவிழ் தாழ் முனிதோளில் வந்த பிரான் வாழியே''* என வரும். அரங்கனுக்கு நாளும் பொன்னி நதி நீரூற்றி, திருமஞ்சனம் செய்து வரும் முனிலோகசாரங்கர் எப்போதும் போல் அன்றும் காவிரியை அடைந்து நீரெடுக்க முனைகையில் அதற்கு இடையூறாகத் திருப் பாணாழ்வார் தன்னை மறந்து பண்ணிசைத்துப் பாடிக் கொண்டிருக்கிறார். முனி அவரைக் கல்லால் அடித்து விட்டுக் கோயி லுக்குள் வந்து அரங்கன் கருவறையை அடைய என்னே ஆச்சரியம்! அரங்கனின் நெற்றியிலிருந்து குருதி வழிய, தன் பிழை உணர்கிறார் லோக சாரங்கர்.

பின்னர் அரங்கன் ஆணையின்படி பாணரைத் தோளில் சுமந்து கொண்டு எம்பெருமான் சன்னதியில் நிறுத்த அமலனாதிபிரான் மலர்கிறது. ஆம்! கனவு நனவாகிறது.

எம்பெருமான் பாணருக்கு திருக்காட்சி நல்குகிறார். ஆதி சங்கரருக்கு மஹாலக்ஷ்மித் தாயார் எப்படிப் பிரசன்னமாகி கனக தாரா ஸ்தோத்திரம் பாட வைத்து கனக மழை பொழிந்து அருள் தந்தாளோ அது



போலவே திருப்பாண ஆழ்வாரும் எம்பிரான் அழகில், கருணையில் மதி மயங்கி அரங்கனின் அந்தமாம் திருவடி தொடங்கி, ஆதியாம் கிரீடம் வரை பாசுரம் இசைக்கிறார். பத்து பாசுரங்கள் முடித்து, *''என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''* என்று சொல்ல, அந்த நேரத்தில் எம்பெருமானுடன் இரண்டறக் கலந்து விடுகிறார். பன்னிருவரில் இருவர் மட்டுமே அரங்கன் முன் ஆட்கொள்ளப்பட்டவர்கள்.

ஒருவர் ஆண்டாள். மற்றொருவர் இக்கட்டுரை நாயகன் திருப்பாணாழ்வார். இவர்கள் செய்த பாக்கியம் என்னே!

### அமலனாதிபிரான்

அமலன் – மலமற்றவன், ஆதி – மூலம், காரணம், பழமை, பிரான் – தலைவன், தலையாய நிலை உடையவனும், உலக உயிர்களின் மூல காரணனும், அறுதியிட்டுச் சொல்ல முடியாத தொல் பழமை யான வனும் ஆகிய மல மற்றவன் அரங்கன் குறித்துப் பாடப் பட்டது அமலனாதிபிரான். இந்த பாசுரத் தின் தொடக்கமே அந்த நூலிற்குரிய பெயராக உள்ளமை முதல் சிறப்பு.

*''அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்''* என்று ஆரம்பித்து அரங்கனின் கமல மொத்த பாதத்தைப் பணிகின்றார் ஆழ்வார். எம்பெருமான் தன் திருப்பாதம் கண்ட பிறகு மேல் நோக்கி எழும் கண்கள் பரந்தாமன் உடுத்தியுள்ள ஆடை மேல் செல்கிறது. சிவந்த செம்பட்டு உடுத்தி எழிலுறத்திகழும் அந்த வடிவழகு தம் சிந்தையில் நிறை கொண்டதாக விளக்கம் தருகிறார். தொடர்ந்து இறையின் பிரம்மனைப்

**திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயிலில் ஸ்வாமிக்கு வலது புறத்தில் இராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீஆண்டாள் தனிச்சன்னதியில் நித்திய பூஜைகளை ஏற்றுத் திருக்காட்சியளிக்கிறாள். வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீஆண்டாள் தாயாருக்கு மாலை நேரத்தில் ஊஞ்சல் சேவை நடைபெறுவதோடு தாயார் திருவீதி வலமும் நடைபெறும்.**

**ஆடிப்பூரம் ஆண்டாளின் திருநட்சத்திரம் ஆகும். ஆடிப்பூரத்தை முன்னிட்டு ஸ்ரீஆண்டாளுக்கு 10 நாட்களுக்கு உற்சவம் நடைபெறும். ஆடிப்பூரம் திருநட்சத்திரத்தன்று ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, ஸ்ரீஆண்டாளுக்கு ஏகக்காலத்தில் அபிஷே ஆராதனைகள் நடை பெறும். மாலையில் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமியுடன் ஸ்ரீஆண்டாள் அலிபிரியில் உள்ள பாதாள மண்டபத்தில் எழுந்தருள, அங்கு திருமலையிலிருந்து திருவேங்கடவன் அனுப்பிய மஞ்சள், குங்குமம், சந்தனம், பட்டு வஸ்த்திரங்கள், மலர் மாலைகள் சமர்ப்பிப்பர்.**

**தனுர்மாதமான மார்கழி மாதத்தில் நாள்தோறும் திருப்பாவை பிரபந்த பாராயணமும் நடைபெறும். போகி பண்டிகைக்கு முன் 7 நாட்கள் ஆண்டாளுக்கு நீராட்டோத்ஸவத்தின்போது காலையில் பல்லக்கு சேவையிலும், மாலையில் திருச்சியிலும் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி புஷ்கரணிக் கரையில் உள்ள மண்டபத்தில் எழுந்தருளுவாள். போகி அன்று ஸ்ரீகிருஷ்ணருடன் போகித் தேரில் வலம் வருவாள். காணும் பொங்கல் அன்று ஆழ்வார் தீர்த்தத்தில் (கபில தீர்த்தம்) திருமஞ்சனம் நடைபெறுவதோடு அன்று மாலை ஸ்ரீகிருஷ்ணருடன் ஸ்ரீகோதா தேவிக்கு திருக்கல்யாண வைபவமும் மிகச் சிறப்பாக நடைபெறும்.**



படைத்த உந்தியழகு தன் உள்ளத்தில் ஊடுறுவியதாகக் காட்டுகிறார். இவற்றை நோக்கும்போது கண்பார்வை அற்றவன் பார்வை கிடைத்ததுடன் அரியதோர் காட்சி கண்டால் எப்படி உவகை எய்துவானோ அந்த நிலைக்கு ஆட்பட்டார் ஆழ்வார் என்பது திண்ணம். இதன் வழி சரணாகதித் தத்துவம் விளங்கும். இதன் சிறப்பு உணர்ந்த வேதாந்த தேசிகர், “முனி வாகன போகம்” என்று விளக்கவுரை எழுதியுள்ளார்.

**வாயழகு**

திருமாலின் வாயழகை *''பச்சை மாமலை போல் மேனி பவள வாய் கமலச் செங்கண்...''* என்று தொண்டரடிப் பொடியாழ்வார் வர்ணிக்க, ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில், *''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவள செவ்வாய் தான் தித்தித்து இருக்குமோ''* என வினவுவார். திருப்பாண் ஆழ்வார் இன்னும் ஒரு படி மேலே சென்று *''மாயனார் செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தைக்கவர்ந்ததுவே''* என்பார். இதில் பயின்று வந்துள்ள “ஐயோ என்பது என்ன சொல்வது; எப்படிச் சொல்வது; எதைச் சொல்வது” என்ற தடுமாற்ற நிலையை உணர்த்தும் சொல். ஆழ்வார் எம்பெருமான் எழிலில் ஆட்பட்ட தால் தடுமாற்றத்திற்கு உள்ளாகிறார்.

இதே போல இராமபிரான் அழகைக் கூறவந்த கம்பர் *''மையோ மரகதமோ...''* என்று சொல்லி தடுமாற்றம் உண்டாய வேளை ஐயோ இவனழகை எப்படி உரைப்பேன் என் வியந்து நிற்பார். இறை மீது இவர்கள் கொண்ட பக்தியே அந்நிலைக்கு அவர் களை ஆட்படுத்துகிறது என்பது தெளிவு. ஒன்பதா வது பாசுரத்திலும் தன்னை மறக்கிறார் ஆழ்வார்.

எம்பெருமான் வடிவழகை விவரிக்கும் வேளை யில் முடிவில்லாப் பேரழகனாய்த் திகழும் அவனை, *''முடிவில்லதோரெழில் நீல மேனி ஐயோ! நிறை கொண்டதென்நெஞ்சினையே''* இனி இதற்கு மேல் என்னால் அவனைப் பாட இயலாது என்ற நிலைக்கு வந்தவர் இறுதியில், *''என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''* என்று சொல்லிய வண்ணம் இருக்க அரங்கன் அவரைத் தன்னுடன் இணைத்துக் கொள்கிறான்.

திருமாலின் கௌஸ்துபம் அம்சமாக அவ தரித்து வீணையிசைத்து, முனிவாகனன் என்னும் சிறப்பு நாமமுற்று பாசுரம் பத்து படைத்து அரங்கன் திருவடி சேர்ந்த பாணர் குலத்திருவே சரணம் சரணம் சரணம்.

**முனைவர் ந. மைதிலி,**
**சென்னை, 9884347886.**

## ஸப்தகிரி அக்டோபர் 2024 விடைகள்



1. ஆண்டாள்.
2. குலசேகர ஆழ்வார்.
3. நம்மாழ்வார்.
4. கருடாழ்வார்.
5. திருவிருத்தம், பெரியாழ்வார் திருமொழி.
6. வேதாந்த தேசிகர்.
7. மணவாள மாமுனிகள்.
8. சிலாதோரணம்.
9. திருவரங்கத்தமுதனார்.
10. கல்யாண கட்டா.
11. திருவேங்கடம்.
12. பேயாழ்வார்.
13. புரந்தரதாசர்.
14. பூதத்தாழ்வார்.
15. இராமாநுஜர்.




**போட்டி எண். 27**

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் எம்.வேதாந்த், அடையார், சென்னை.
2. செல்வி க.ரம்யா, பொன் அண்ணாமலை நகர், விழுப்புரம் மாவட்டம்.
3. செல்வன் தேவமுருகா, மேட்டு பிள்ளையார் கோயில் தெரு,சேலம்.

ஏழுமலையான் அருளால் 1977 நவம்பர் மாதம் நான், என் குடும்பத்தினருடன் பிரார்த்தனை நிமித்தம் ஏழுமலையானைத் தரிசிக்க செங்கல்பட்டிலிருந்து புறப்பட்டு நள்ளிரவு 12 மணி அளவில் திருப்பதியைச் சென்றடைந்தோம். அப்போது எனக்கு வயது 24.

எனக்கு கடவுள் பக்தி இல்லாத காரணத்தினால் வேண்டாவெறுப்புடன் சென்றேன். என் தந்தை சொற்படி முடிகாணிக்கை கொடுத்து விட்டுப் புதிய ஆடை அணிந்து முதலில் வராஹ ஸ்வாமியின் நுழைவாயிலை அடைந்தோம். எனக்கு கடவுள் பக்தி இல்லாததால் நான் ஒருவன் மட்டும் குளிர் அதிகமாக இருந்ததால் கைகளை மூடிக்கொண்டு வராஹ தீர்த்த புஷ்கரணியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, மீதியிருந்தவர்கள் வராஹ ஸ்வாமி தரிசனத்திற்குச் சென்றனர். மூடியிருந்த என் வலது கையில் ஏதோ ஊர்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் திறந்து பார்த்தபோது, எனது உள்ளங்கையில் துளசி பிரசாதமாக இருந்தது. துளசி தானே என வாயில் போட்டுக் கொண்டேன். அதன் சுவையே வேறு எந்த துளசியிலும் நான் இதுவரை காணாத வகையில் இருந்தது. ஸ்ரீநிவாசனே எனக்கு நேரில் வந்து கொடுத்த பிரசாதம் அல்லவா? எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. என் குடும்பத்தினர் அனைவரும் சன்னதியை விட்டு வெளியே வந்தார்கள். நடந்த நிகழ்ச்சியை அவர்களிடம் சொல்லவில்லை. எனக்கு மூடியிருந்த கையில் துளசி எப்படி வந்திருக்கும் என்ற ஒரே சிந்தனை. அங்கிருந்து புறப்பட்டு நேரே திருவேங்கடவனைத் தரிசிக்கச் சென்றோம். பெருமாளை தரிசனம் செய்து விட்டு அன்று இரவு 9 மணி அளவில் வீடு வந்து சேர்ந்தோம். வீட்டிற்கு வந்த பிறகு தான் என் தந்தையிடம் நடந்த விவரத்தைக் கூறினேன். அன்று நாள் முழுவதும் அதே சிந்தனை தான். ஆச்சரியம் அடைந்தேன்.

கோயில் செல்லாத உனக்குப் பெருமாள் நான் இருக்கிறேன் என்று உணர்த்துவதற்காக இந்த நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறான் அந்த வேங்கடேசப் பெருமாள் என்று என் தந்தை கூறினார்.எனது கையில் துளசி பிரசாதத்தை கொடுத்து கடவுள் நம்பிக்கை இல்லாத எனக்கு கடவுள் நம்பிக்கையைப் புகட்ட, உணர்த்திய பெருமாள் திருவேங்கடவன் திருப்பாதங்களை வணங்குகிறேன். அவருக்கு கோடான கோடி நமஸ்காரங்கள். எதற்கும் எப்போதும் எங்கும் வேங்கடவனுடைய சிந்தனையிலேயே இருந்தால் போதும் ஒவ்வொரு மனிதனுக்கும், எல்லா உயிர்களுக்கும் எது நடக்க வேண்டும், எப்படி அமைய வேண்டும், எப்படி எங்கு கொடுக்க வேண்டும் என்று வேங்கடவனுக்கு மட்டும் தான் தெரியும்.

பெருமாளை சதா காலமும் நினைத்துக் கொண்டிருந்தால் சகல ஆஸ்திகளும், சகல சௌபாக்கியங்களும், செல்வச் செழிப்பும், உடல் நலனும், தேக ஆரோக்கியமும் அவன் அருளால் எல்லோருக்கும் கிடைக்கும் என்பது நிச்சயம்



# திருவேங்கடவனின் திருலீலை

– திரு.வி.பத்மநாபன்,
செங்கல்பட்டு,96002 43251

*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# அதிரதன்-சல்லியன்



– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

மகாபாரதத்தில் சொல்லப்படும் வீரர்கள் அனைவரும் ரதர்கள், மஹாரதர்கள், அதிரதர்கள் என்று அவரவர்களுடைய பராக்கிரமத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி பிரிக்கப்படுகின்றனர்.

தரையில் நின்றும், குதிரை, யானை, தேர் ஆகியவற்றின் மீது ஆரோகணித்தபடியும் பலவித ஆயுதங்களையும் பயன்படுத்திப் போரிட வல்லவர்கள் ரதர்கள் என்றும், ஒரே சமயத்தில் பதினோராயிரம் ரதர்களோடு சண்டையிடக் கூடியவர்கள் மஹாரதர்கள் என்றும், பல மஹாரதர்களுக்கு எல்லாம் தலைமை வகிக்கக் கூடிய அளவுக்கு மாபெரும் பராக்கிரமம் கொண்டவர்கள் அதிரதர்கள் என்றும் கூறப்படுகின்றனர்.

மத்ரதேசத்தைச் சேர்ந்த அதிரதனாகிய சல்லியன், பஞ்சபாண்டவர்களின் தந்தை பாண்டுவின் இரண்டாவது மனைவி மாத்ரியின் சகோதரனும், நகுலன், சகாதேவன் ஆகியோருடைய தாய்மாமனுமாவான். சல்லியன் பாண்டவர்களுக்கு விரோதிகளாகிய கௌரவர்களின் பக்கம் நின்று போரிட முடிவு செய்ததே அந்த எதிர்பாராத திருப்பமாகும்.

மஹாபாரதப் போர் நடப்பது நிச்சயம் என்றாகி விட்ட நிலையில் தன்னுடைய மருமகன்களாகிய பாண்டவர்களுக்கு உதவி செய்ய உத்தேசித்துத் தனது பெரும் சேனையைத் திரட்டிக் கொண்டு பாண்டவர்கள் தங்கியிருந்த உபப்பிலாவியம் என்னும் நகரத்தை நோக்கிச் சென்றான் சல்லியன். சுமார் ஒன்றை யோஜனை தூரம் (பதின்மூன்றரை மைல் நீளம்) அளவுள்ள பெரும்படையுடன் சல்லியன் வருவதை அறிந்த துரியோதனன் தன்னுடைய வேலையாட்கள் பலரையும் அனுப்பி வைத்து சல்லியனும் அவனுடைய படையினருக்கும் உணவு, குடிநீர் உள்ளிட்ட அனைத்துவிதமான உபசாரங்களையும் செய்யும்படி உத்தரவிட்டான்.

வந்திருப்பவர்கள் தருமபுத்திரரின் ஆட்கள்தான் என்று நினைத்த சல்லியன் “இத்தகைய உபசாரங்களைப் புரிந்த உங்கள் எஜமானனுக்கு மஹாபாரத யுத்தத்தில் உதவி செய்வது எனது கடமை” என்று அவ்வேலையாட்களிடம் கூற, சட்டென்று அவ்விடத்திற்கு வந்த துரியோதனன் சல்லியனை வணங்கி நின்றான்.

“அதிரதரும், பெரும் வீரருமாகிய சல்லியரே! தாங்கள் கூறியபடி இப்போரில் எனது பக்கம் நின்று பாண்டவர்களுக்கு எதிராகப் போரிட வேண்டும்” என்று துரியோதனன் வேண்டிக் கொள்ள, திகைத்து நின்ற சல்லியன், அவன் அளித்த ஒருவேளைச் சாப்பாட்டிற்காகத் தான் கடன் பட்டிருப்பதாக எண்ணியதால் அவ்வாறே செய்வதாக வாக்களித்தான்.

துரியோதனனின் தந்திரத்தால் இவ்விதம் பாண்டவர்களுக்கு எதிராகப் போரிட வேண்டிய நிலைமையை எண்ணி வருந்திய சல்லியன், தனது படைகளுடன் குருக்ஷேத்திரத்திற்குச் செல்லும் முன்பு உபப்பிலாவியத்திற்குச் சென்று தர்மபுத்திரரைச் சந்தித்து நடந்த விஷயங்களை எடுத்துக் கூறினான்.

சல்லியன் கூறியதைக் கேட்டு வருந்திய தரும புத்திரர் "நடந்தது நடந்து விட்டது. தாங்கள் நன்றாகத் தேரைச் செலுத்தக் கூடிய வர் என்பதை அனைவரும் அறிவர். இம்மஹாபாரதப் போரில் எங்கள் பிரியத்துக்குரிய அர்ஜுனனைக் கொல்வதென்று சபதம் செய்திருக்கின்ற கர்ணனுக்குத் தாங்கள் தேர் ஓட்டும் நிலை வந்தால் அப்பொழுது என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

அதைக்கேட்ட சல்லியன், "வருந்தாதே அப்பனே! நான் தனியாகப் போரிடும் வேளையில் உங்களுடைய படைகளை எதிர்த்து உக்கிரமாகப் போராடுவேன். அதே சமயம், நான் கர்ணனுக்குத் தேரோட்டும் நிலைமை ஏற்பட்டால், அவனுடைய மனோ தைரியத்தைக் குலைக்கும் விதமாகப் பேசுவதன் மூலம் அர்ஜுனனின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று தர்மபுத்திரருக்கு வாக்களித்து விட்டுப் போர்முனைக்குச் சென்றான்.

அதே போன்று, கௌரவப் படைகளுக்குத் தலைமை வகித்த துரோணாச்சாரியார் வீழ்ந்த பிறகு கர்ணன் படைத் தலைமையை ஏற்றுக் கொண்டான். தருமபுத்திரர் எதிர்பார்த்தது போலவே கர்ணனின் தேரைச் செலுத்தும்படி கௌரவர்கள் சல்லியனைக் கேட்டுக் கொண்டனர்.

கர்ணனின் தேரைச் சல்லியன் செலுத்தும் சமயத்தில் அவ்விருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரத்தில் தன்னிலை மறந்த கர்ணன் சல்லியன் பிறந்த மத்ர தேசத்து மக்களின் ஒழுக்கத்தைப் பற்றி இழிவாகப் பேசினான். பதிலுக்குச் சல்லியனும் கர்ணனைப் பலவாறு நிந்தனை செய்தான். ஏற்கனவே தான் பெற்றிருந்த சாபங்கள், சல்லியனுடன் ஏற்பட்ட வாக்குவாதம் ஆகிய காரணங்களால் கர்ணன் மனதளவில் சோர்வடைந்தான்.

இவ்வுலக வாழ்வில், ஒருவருடைய உற்சாக மும், மன உறுதியும் தளரும்படி யாராவது பேசினால், அதனை சல்லிய சாரத்தியம் செய்வது என்ற வழக்கம் இதன் பின்பே ஏற்பட்டது.

ஏற்கனவே மனம் தளர்ந்திருந்த கர்ணனுடைய தேரின் சக்கரம் மண்ணில் சிக்கிக் கொள்ள, ஸ்ரீகிருஷ்ண பகவானின் அறிவுரைப்படி அர்ஜுனன் அவன் மீது கணையைச் செலுத்தி அவனைக் கொன்றான்.

கர்ணன் வீழ்ந்தவுடன் சல்லியனே கௌரவப் படைகளுக்குத் தலைமை தாங்கி உக்கிரமாகப் போர் செய்யத் தொடங்கினான். அவனை எதிர்த்த தரும புத்திரர் பலத்த சண்டையின் முடிவில் சக்தி என்னும் ஆயுதத்தைப் பிரயோகித்துக் கொன்றார்.

தம்பிகளாகிய பாண்டவர்களுக்கும், அவர்களின் மனைவியாகிய திரௌபதிக்கும் துரோகம் இழைத்த துரியோதனனுக்காக, "சொன்ன சொல்லைக் காப்பாற்றுவேன்" என்று தான் கூறிய உறுதிமொழி என்னும் வலையில் தானே சிக்கிக் கொண்டு மடிந்த சல்லியன் மீது பரிதாபப் படுவதைத் தவிர வேறு வழியில்லை.

மொத்தத்தில் நெருங்கிய உறவினர்களே ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போர் செய்ய வேண்டிய தர்ம சங்கட நிலைமையும், அதன் பின் விளைவு களையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறும் இன்னொரு மஹாபாரதக் கதாபாத்திரமே சல்லியன் என்றால் அது மிகையாகாது.

தொடர்ந்து அலசுவோம்...



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ராமாநுஜர்யோபி ஸ யாமுநார்யம்*
*ஸம்ஸேவிதும் ரங்க$_3$புரீம் க$_3$மிஷ்யந் ।*
*ப்ராஜ்யமம் மஹாபூர்ணயுத: கவேரகந்*
*யாதடே ஸூரிக$_3$ணம் த$_3$தர்ச ॥*

(34)

**பெரிய நம்பியோடு கூடிய ராமாநுஜாசார்யரும், ஆளவந்தாரை சேவிப்பதற்கு ஸ்ரீரங்கம் செல்லாநிற்கும் போது, வடதிருக் காவேரிக் கரையிலே மிகுதியான ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தைக் கண்டார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

**– திரு.எம்.எஸ்.சுகுமார்,**
**சென்னை, 8838252312.**

*செப்டம்பர் மாத இதழின் தொடர்ச்சி...*

**சூத்திரம் 10 :** *“தஸ்ய ப்ரசாந்த வாஹிதா ஸம்ஸ்காராத்”*

கிளிர்த்தெழும் நினைவுகள் படிப்படியாக அடங்கிய பின் நிறுத்தப்படும் இயல்பு (முயற்சி) நடந்துகொண்டே இருக்கும். அந்த இயல்பு மெதுவாகத் தொடரும். அதாவது மிக நுண்ணியமாக அந்த இயல்பு நடந்து கொண்டிருக்கும். இதை அவஸ்தா பரிணாமம் என்று கூறுகிறார்கள். இனி சம்பிரக்ஞாத சமாதியில் சித்தத்தின் நிலமை எப்படி இருக்கும் என்பதை கூறுகிறார்கள்.

**சூத்திரம் 11 :** *“ஸ்வார்த்ததைகாக்ர தயோ: க்ஷயோதயௌ சித்தஸ்ய ஸமாதி பரிணாம:”*

மேற்சொன்னவாறு கிளர்ந்து எழும் சிந்தனைகள் ஒழிந்து நிறுத் தப்படும் இயல்பும் மிகவும் குறைந்த பின் சித்தம் ஏகாக்கிர நிலையில் மாறும். அந்தச் சமாதி நிலையில் தியானிக்கப்படும் இலக்கின் உணர்வு மட்டும் இருக்கும். இதை நிர்விதர்க சமாதி நிலையில் தியானிக்கப்படும் இலக்கின் உணர்வு மட்டும் இருக்கும். இதை நிர் விதர்க சமாதி அல்லது நிர்விசார சமாதி என்று கூறுவார்கள். சலனங்கள் எழுவது நின்று போய் ஏகாக்கிர நிலை உருவாவதை சமாதி பரிணாமம் என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 12 :** *“தத: புன: சாந்தோதிதௌ துல்யப்ரத்யயௌ சித்தஸ்யை காக்ரதா பரிணாம:”*

சித்தத்தில் கிளர்த்தெழும் சிந்தனைகள் அடங்கிய நிலை விட்டு ஏகாக்கிர நிலை அடையும்போது அதை ஏகாக்கிரதா பரிணாமம் என்று கூறுகிறார்கள்.

அச்சமயம் சிந்தனைகள் அடங்கும் இயல்பும், ஏகாக்கிர நிலை (ஒன்றிய நிலை) உதயமாவதும் இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை சற்றே வித்தியாசப்படும் என்பதை சமாதி பரிணாமம் என்று முன் சொன்ன சூத்திரத்தில் கூறியிருந்தார்கள். அதற்குப்பின் வரும் நிலையானது – அந்த வித்தியாசம் மறைந்து விட்டிருக்கும் (அதாவது அடங்குவதும் ஏகாக்கிரம் உதயமாவதும்). இவற்றில் எதுவும் உணர முடியாது. இதையே ஏகாக்கிரதா பரிணாமம் என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 13 :** *“ஏதேன பூதேந்திரியேஷு தர்மலக்ஷணாவஸ்தா பரிணாமா: வ்யாக்யாதா:”*

பரிணாமம் மூன்று வகைப்படுகிறது. தர்ம பரிணாமம், லக்ஷண பரிணாமம், அவஸ்தா பரிணாமம்.

இந்த மூன்று பரிணாமங்களும் குணங்களின் (சத்துவ, ராஜஸ, தாம்ஸ குணங்கள்) அனைத்தும் சிருஷ்டிகளிலும் சேர்ந்திருக்கின்றன. பரிணாம சிருஷ்டி (மாறுதல் அடைவது) எதில் நிகழ்கிறதோ அது தர்மீ எனப்படுகிறது. (மாறுதல் அடைந்து விட்ட நிலையான படைப்பை) பரிணாம சிருஷ்டியை தர்மம் என்று கூறுவார்கள். எதையும் சார்ந்திராத பிரகிருதி சக்தி (அனைத்து சிருஷ்டிகளின் மூலக்கூறு) தர்மீ ஆகிறது. மற்றதெல்லாம் – மகத்தத்துவத்திலிருந்து (சூப்ரீயர் பவர்) ஐந்து ஸ்தூல மகாபூதங்கள் வரை ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும் தர்மியும் தர்மமும் ஆகின்றன. இந்த தர்மீயில் (சிருஷ்டியின் மூலப்பொருள்) கீழே சொல்லப்படும் பரிணாம சிருஷ்டி எப்படி ஆகிறது என்று பார்ப்போம். இந்த மூன்று பரிமாணங்களில்

தர்ம பரிணாமமும், லக்ஷண பரிணாமமும் பொருளின் உற்பத்தி சமயம் நிகழ்கின்றன. அவஸ்தா பரிணாமம் அப்பொருளின் இறுதிக் கட்டம் வரை இருக்கிறது.

10வது சூத்திரத்தில் கூறப்பட்ட சித்தம் சமாதிக்குக் தயாராகி விடுகிறது. நிறுத்தப்படும் இயல்பு கடந்த காலத்தில் போய்க் கொண்டு இருக்கிறது. இது சித்தத்தின் அவஸ்தா பரிணாமமாகும்.

11வது சூத்திரத்தில் சம்பிரக்ஞாத சமாதியில் சித்தத்தின் சலனங்கள் அழிந்து ஒன்றை மட்டும் சார்ந்து ஏகாக்கிர நிலை உருவாகிறது.

சித்தம் ஏகாக்கிர நிலையில் இலக்குடன் ஒன்றிப் போகும்போது சித்தத்தில் தர்ம பரிணாமமாகிறது.

12 வது சூத்திரத்தில் சமாதி – பரிணாமத்தின் அப்யாச பலத்தால் ஒரே விஷயத்தின் தியானத்தால் சலனப்படுவது அடங்கி விடுகிறது. அடுத்த கட்டமாக மாற ஆரம்பிக்கிறது. அதாவது சலனப்பட்ட மற்ற விஷயத்தை துறந்து ஒரே இலக்கைப் பிடிக்கிறது. சமாதி கலையும் வரை இது தொடர்கிறது. இதுவே தர்மீ சித்தத்தின் ஏகாக்கிர பரிணாமமாகிறது. இது பலவீனப்படும்போது அவஸ்தா பரிணாமமாகிறது.

**சூத்திரம் 14 :** *“சாந்தோதிதாவ்யபதேஷ்ய தர்மானுபாதி தர்மீ”*

முன் சொன்ன சூத்திரத்தில் தர்ம, லக்ஷண, அவஸ்தா பரிணாமங்கள் அனைத்து சிருஷ்டியிலும் – அதாவது பஞ்ச பூதங்களிலும், புலன்களிலும் நிகழ்கின்றன. முக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு தான் அந்த மூன்று பரிணாமங்கள் நிகழ்கின்றன. தர்மீ என்பது யாது? என்பதை மேலும் விளக்கமாக இந்த சூத்திரத்தில் கூறுகிறார்கள். கடந்த காலம், தற்காலம், வரும் காலம் இந்த மூன்றையும் அடிப்படையாகக் கொண்டிருப்பது தர்மீ எனப்படுகிறது.

**சூத்திரம் 15 :** *“க்ரமான்யதவம் பரிணாமான்யத்வே ஹேது:”*

பொருட்கள் தர்மீயிலிருந்து வேறு விதமாக பரிணமிக்கிறதற்கு அதில் உள்ள காலக்கிரமமே காரணமாகிறது. உதாரணத்திற்கு இவ்வாறு கூறலாம். பருத்தி பல நிலைகள் கடந்து பரிணமித்து ஆடையாக மாறுகிறது. நடுநடுவில் வேறு வேறு விதமாக உருவகப் படுகிறது.

பருத்தி முதலில் சுத்தமாக்கப்பட்டு பெரிய பெரிய பந்துகளாக மாறுகிறது. அதன்பின் நூலாக மாறுகிறது. தறி என்ற நிமித்தக் காரணத்தினால் மேலும் கீழும் கோர்க்கப் பட்டு நெய்யப்பட்டு ஆடையாக மாறுகிறது. இதில் பருத்தி, பல பரிணாமங்களைக் கடந்து வந்திருக்கிறது.

ஆனால் விளக்கேற்றும் திரியாக மாற்ற வேண்டுமானால் அதில் சிறிய மாற்றம் மட்டும் உண்டாக்கினால் போதும். கிணற்றில் இருந்து நீர் இறைப்பதற்கு மிக உறுதியாக கயிறு தயாரிக்க பல விதமாக காரியங்களில் பரிணமித்து அதன் பின் அது உருவாகும்.

**சூத்திரம் 16 :** *“பரிணாமத்ரய ஸஞ்ய மாததீதானாகத க்ஞானம்”*

மூன்று பரிணாமங்களில் சஞ்யமம் செய்தால் இனி நடக்கப் போகும் விஷய ஞானத்தையும், நடந்து முடிந்த விஷய ஞானத்தையும் அறிந்து கொள்ளும் சக்தி வந்து விடும்.

தொடரும்....

**கண்ணன் கருத்துரை**



*பக்த்யா த்வநன்யயா சக்ய அஹமேவமம் விதோசர்ஜுன।*
*ஞாதும் த்ரஷ்டும் ச தத்வனே ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥*

(11-54)

**அர்சுனா! என்னை உள்ளபடி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், நேருக்கு நேர் காண வேண்டும் என்றால், இறுதியில் என்னுள் இடம் பெற வேண்டும் என்றால் அது என்பால் வைக்கும் மாறாத பக்தியாலே இயலும்.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.





# செந்தாமரை தந்த செய்யாள்

– திரு. ஆர். ஸ்ரீராமன்,
பெருங்களத்தூர்.

செல்வத்திற்கு அதி தேவதையான திருமகளின் திருநாமங்களையும், பெருநிலம் அளிக்கும் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமம் சொல்லும் இடங்களிலும் தாமரை மலர் நிச்சயம் இடம் பெறும். தாமரை நீர் நிறைந்த தடாகங்களில் மலரும் ஓர் அழகான மலர்.

முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் அமுதம் வேண்டி, மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்ற சர்ப்பத்தைக் கயிராகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தனர்.

அப்போது அநேக மங்களப் பொருட்கள் தோன்றின. காமதேனு, கற்பக விருக்ஷம், ஐராவதம் என்ற நான்கு கொம்புகள் கொண்ட வெள்ளையானை, வெள்ளை குதிரை சமந்தக மணி, இவற்றோடு, வீதியில் உற்சவ மூர்த்திகள் உலா வரும்போது மங்கள வாத்யங்கள் முழங்குவது போன்று வலம்புரிச் சங்கு பூம் பூம் என்ற ஒலியுடன் வெளிப்பட்டது. அவ்வொலியைத் தொடர்ந்து சிவந்த தாமரை மலர் மீது அமர்ந்தத் திருக்கோலத்தில் திருமகள் (மஹாலக்ஷ்மி) தோன்றினாள்.

எனவே திருமகளின் அவதார தலம் தாமரை மலராயிற்று.

*“லக்ஷ்மீம் க்ஷீர சமுத்ர ராஜ தனயாம்”* என்பது லக்ஷ்மி ஸ்தோத்திரம்.

“சேற்றில் மலர்ந்த செந்தாமரை” என்று கூறுவதுண்டு. பிறந்த இடம் சேறாக இருந்தாலும், அது திருமகளின் திருக்கரங்களில் நீங்காத இடம் பெற்றது.

“தேன்” உயர்ந்த மருத்துவ குணம் கொண்டது. ஆனால் அது தேனீக்களின் எச்சில் வாந்தி என்றும் கூறுவர். பட்டு உயர்ந்த பொருளாயினும் அது பட்டுப் பூச்சியின் வாய் எச்சில் நூல் தானே. அது உயர்ந்த இடம் பெற்றது போலவும், பால் கன்றுக் குட்டியின் எச்சில் என்றாலும் அது இறைவன் திருமஞ்சனத்திற்கு ஏற்றதல்லவா?

“உச்சிஷ்டம் உத்க்ருஷ்டம்” என்பது போல சேற்றில் பிறந்த செந்தாமரை தெய்வீக சம்பந்தம் பெற்றது.

தாமரைக்கு வேறு பெயர்களும் உண்டு. பொதுவாக புஷ்பம், மலர் என்றால் அது தாமரையைத் தான் குறிக்கும். மற்ற மலர்களின் பெயரோடு சொல்ல வேண்டும். ரோஜா மலர் மற்றும் மல்லிகைப் புஷ்பம் என்று வெள்ளை மலர்கள் அனைத்தும் இரவில் மலரும் மலர்களாகும். வண்ண மலர்கள் சூரியனைக் கண்டு மலரும் மலர்கள். “சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்தது முகம்” என்பர். ஸ்ரீராமபிரானின் முகம் தாமரை போன்று இருக்கும். கைகேயி இராமனை வனம் செல்

என்று கூறியபோது "செந்தாமரையினை வென்ற தம்மா" என்று சொல்லுவார் கம்பர்.

தாமரை சூரிய உதயத்தில் மலர்ந்து அஸ்தமனத்தில் கூம்பி விடும்.

கம்பராமாயணத்தில் விஸ்வாமித்திரர் யாகம் முடிந்து மிதிலைக்குச் செல்லும்போது ஜனகரின் அரண்மனை மதில் மேல் இருந்த கொடிகள், திருமகள் தன் இருப்பிடமாகிய தாமரை மலரை விட்டு எங்கள் தவத்தின் பயனால் (செய்யாள்) இங்கு இருக்கிறாள். இராமா நீ விரைவில் வருக வருக என்று அழைப்பது போன்று இருந்ததாம்.

ஸ்ரீமந்நாராயணனின் திருக்கரங்கள், திருப் பாதங்கள், திருக்கண்கள், திருமார்பு இவற்றைத் தாமரையோடு ஒப்பிடுவர்.

அம்புஜம், கமலம், பத்மம், குமுதம், அரவிந்தம், அங்க்ரி, பங்கஜம், அல்லி போன்றவை தாமரையைக் குறிக்கும் சொற்களாகும். திருமகள் நித்ய வாஸம் செய்யும் இடங்கள் என்று சொல்லும்போது – தாமரை மலரின் மத்தியில், யானையின் மஸ்தகத்தில் (தலை), பசுவின் வால் பாகம், வில்வ இலையின் முக்கணு, துளசி தளம், வேதம் ஒலிக்கும் இடம், சுமங்கலிகளின் சீமந்தம் என்னும் வகிடு போன்ற இடங்களில் நித்ய வாசம் செய்கிறாள்.

எம்பெருமானையும், அம்பாளையும் வர்ணிக் கும்போது...

முகாம்புஜம் = முகம்+அம்புஜம்; கமலநயனம் = கமலம் + நயனம்; பத்மபாதம் = பத்மம்+பாதம்; கராரவிந்தம் = கரம்+அரவிந்தம்; முகாரவிந்தம் = முகம்+அரவிந்தம்; அலர்மேல் மங்கை = அலர் (தாமரை) மேல் வீற்று இருக்கும் மங்கை.

அல்லி = *''அல்லி மாதர் புல்க நின்ற ஆயிரம் தோளுடையான்''* சங்கர பாஷ்யத்தில் "நிச்சேஷ = ஸுரி–மூர்தாலி–மாலா–லீசாங்க்ரி–பங்கஜாத்ரி என வர்ணிக்கப்பட்டுள்ளது.

*''ஜயதி பகவத் பாத ஸ்ரீமந் புகாம்புஜ நிர்கதா''* என்று ஆசார்யாள் பாதத்தை தாமரையோடு ஒப்பிடுகிறார். "குருவாகிய ஆசாரியனின் முகமாகிய தாமரை மலரில், சிஷ்யர்களாகிய வண்டுகள் மொய்க்கின்றன" என்பார் பத்மபாதர்.

மஹாலக்ஷ்மியைத் தாமரை மலரால் அர்ச்சனை செய்வதை நயமாக ராமேஸ்வரத்தில் சமுத்திர பூஜை செய்பவர்கள் சமுத்திர தேவனுக்கு, அந்த சமுத்திர ஜலத்தையே ஒரு கை அள்ளி அபிஷேகம் செய்வது போல இருந்ததாம்.

*''பரிமள போக ஸச்சிதாநந்தே ஸ்ரீபதி பாதார விந்தே!!''* என்று எம்பெருமான் பாதம் ஸுகந்தமாக இருந்ததாம்.

லக்ஷ்மி ஸ்தோத்திரத்தில் *''பத்மப்ரியே, பத்மினி, பத்மஹஸ்தே, பத்மாலயே பத்ம தளாய தாக்ஷி''* என்று அம்பாளை அர்ச்சிக்கிறார்.

பத்மப்பிரிரே – தாமரையை விரும்புபவள், பத்மினி – தாமரைக்கொடி (சௌ குமார்யத்தால் துவண்ட கொடியாக இருக்கிறாள்), பத்ம ஹஸ்தே – இரு திருக்கரங்களிலும் தாமரையைத் தாங்கியவள், பத்மாலயே – தாமரையில் அமர்ந்தவள், தாமரை மலரால் விரும்பப்படுபவள், பத்ம தளாய தாக்ஷி – தாமரை போன்ற திருக்கண்களையும், குளிர்ந்த பார்வையும் உடையவள். பத்ம மாலா தரா – தாமரை மலர் மாலை அணிந்தவள். பத்ம கந்தினி – தாமரை மலர் மணம் வீசும் சரீரத்தை உடையவள். பத்ம நாபப்பிரியா – தன்னுடைய நாபிக் கமலத்தில் நான் முகனை ஏந்தி நின்ற பத்மநாபனுக்குப் பிரியமானவள்.

கங்கையை *''திவ்ய தூநீ மகரந்தே''* என்பர். திருவிக்கிரம அவதாரத்தில் மேலுலகை அளந்தபோது பிரம்மன் அந்தத் திருவடிக்கு ஜலம் சேர்த்து வழிப்பட்டார். அந்தத் திருவடி சம்பந்தப்பட்ட ஜலம் தான் திவ்ய தூநீ மகரந்தமாக பூமிக்கு வந்தது. மகரந்தம் என்றால் தேன். பகவானின் திருப்பாதக் கமலம் ஸுகந்தமாக இருக்கிறது. "பரிமள போக ஸச்சிதாநந்தே"(பரிமள ரங்கநாதர்)

ஆழ்வார்களும் பாசுரங்களில் தாமரை மலரை வர்ணித்து பாசுரமிட்டனர். *"கண்ணும் கமலம், கமலமே கைத்தலம், மண்ணளந்த பாதார விந்தமும் மற்று அவையே"* என்றும் *"படிவட்டத்தாமரை பண்டு உலகம் நீரேற்றது''* என்றும், *''உத்தமன் நற்பாதம் உருங்கண்டாய் ஒண்மலர் கமலத்தினால்''* என்றும், *''இருந்தண் கமலத் திருமலரினுள்ளே திருந்து திசை முகனைத் தந்தாய்''* என்றும், *''என் பொல்லாக் கனிவாய்த் தாமரை கண்டேன் கமல மலர் திருப்பாதம்''*

என்றும், ''காண்டலுமே விண்டொழிந்த என் வினையாயின வெல்லாம்'' என்றும் ''கமலநயனத்தால் செங்கமலமென் மலரடி'' என்று திருவயிந்தை ஹேமாம்புஜ வல்லியைப் பாடும் அழகும் தாமரையின் பெருமைகளைக் கூறும்.

சஹஸ்ர நாமத்தில் ''லக்ஷ்மி காந்தம் கமல நயனம்'' என்றும், ''பஜந்தியே புஷ்கராக்ஷம், பத்ம பத்ர விசாலாக்ஷம், பத்மநாப ஸுரோத்தமா'' என்றும், ''ஆதார நிலையோ தாதா புஷ்பா ஹாஸ ப்ரஜாஹர, இந்திவர தளஸ்யோ, இந்து சீதளம், பத்ம கிஞ்ஜஸ்க ஸந்நிப, அரவிந்தாயோ மூஸலி மதுசூதனா, பத்மஹாரம், ஸரஸி ஜநயனே ஸரோஜ ஹஸ்தே'' என்று சஹஸ்ரநாமமும் தாமரையைப் போற்றுகிறது.

இவ்வாறு தாமரை மலர் திருமகளின் பிறப்பிடத்தால் இப்பூவுலகில் பெருமையுற்றது.

# தசாவதாரப் பெருமாள்!

*பள்ளியில் ஓதிவந்த தன் சிறுவன் வாயில் ஓராயிர*
*நாமம் ஒள்ளியவாகிப்போத ஆங்கு அதனுக்கு*
*ஒன்றும் ஓர் பொறுப்பிலனாகி*
*பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்புப் பிறை*
*எயிற்று அனல் விழி பேழ்வாய்*
*தெள்ளிய சிங்கமாகிய தேவைத்*
*திருவல்லிக்கேணி கண்டேன்*


என்கிறார் கலியன்.

இரண்யாட்சனின் அண்ணன் திருமாலின் பகைவனாகி, தீமை பல புரிந்த போது எடுத்த அவதாரம் இது.

*''அந்தியம் போதில்*
*அரியுருவாகி அரியை*
*அழித்தவனைப் பந்தனை தீரப்*
*பல்லாண்டு''* என்று பாடுகிறார் பெரியாழ்வார். (அரி – சிங்கம், அரி – எதிரி).

*எங்குமுளன் கண்ணன் என்ற*
*மகனைக் காய்ந்து*
*இங்கு இல்லையால் என்று*
*இரணியன் தூண் புடைப்ப*
*அங்கு அப்பொழுதே அவன் வீய*
*தோன்றிய - என்*
*சிங்கபிரான் பெருமை ஆராயும்*
*சீர்மைத்தே*

என்கிறார் நம்மாழ்வார்.




*அளந்திட்ட தூணை அவன் தட்ட - ஆங்கே*
*வளந்திட்டு வாளுகிர்ச்சிங்க உருவாய்*
*உளந்தொட்டு இரணியன் ஒண் மார்வகலம்*
*பிளந்திட்ட கைகளால் சப்பாணி*

என்று கண்ணனை அழைக்கிறார் புதுவையர் கோன்.

*அழகியான் தானே! அரியுருவம் தானே!* என்று அழகிய சிங்க உருவில் ஆழ்ந்தார்கள் ஆழ்வார்கள் பலரும்.

*ஆடி ஆடி அகம் கரைந்து*
*- இசை, பாடிப்பாடி*
*கண்ணீர் மல்க - எங்கும்*
*நாடி நாடி நரசிங்கா!*
*என்று, வாடி வாடும்*
*இவ்வாள் நுதலே*

என்று பெண் பேச்சில் விளங்குகிறார் பராங்குசர்.

அழகிய உருவில் வானோர்க்கும் அச்சம் தரும் கோலத்தையும் இணைத்துக் காட்டுகிறார் கலியன்.

*''எரிந்த பைங்கண்*
*இலங்கு பேழ்வாய்*
*எயிற்றோடு இது எவ்வுரு என்று*
*இரிந்து வானோர் கலங்கிட*
*இருந்த அம்மானது*
*இடம்... சிங்கவேள் குன்றமே''*

என்கிறார் ஆழ்வார்.

- நன்றி : பகவத் விஷய கட்டுரைகள் (பாகம்-1)



திருச்சானூர்

# ஸ்ரீபத்மாவதித்தாயார் பிரம்மோத்ஸவம்

**28-11-2024 முதல்**
**06-12-2024 வரை**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 27-11-2024 | புதன் | இலக்ஷ குங்குமார்ச்சனை | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 28-11-2024 | வியாழன் | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | சிறிய சேஷ வாகனம் |
| 29-11-2024 | வெள்ளி | பெரிய சேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 30-11-2024 | சனி | முத்துப்பந்தல் வாகனம் | சிம்ம வாகனம் |
| 01-12-2024 | ஞாயிறு | கல்ப விருக்ஷ வாகனம் | ஹனுமத் வாகனம் |
| 02-12-2024 | திங்கள் | பல்லக்கு உத்ஸவம், மாலை: வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 03-12-2024 | செவ்வாய் | சர்வபூபால வாகனம், தங்கத்தேர் | கருட சேவை |
| 04-12-2024 | புதன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 05-12-2024 | வியாழன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 06-12-2024 | வெள்ளி | பல்லக்கு திருச்சி உத்ஸவம், சக்கரஸ்நானம், பஞ்சமி தீர்த்தம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |

**07-12-2024 சனிக்கிழமை புஷ்ப யாக மஹோத்ஸவம்**












## ஆந்திர மாநில அரசால் 2024, நவம்பர் மாதத்தில் தி.தி.தேவஸ்தானத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுக்கொண்ட பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்



திரு. பொல்லிநேனி ராஜகோபால நாயுடு
பொறுப்பாண்மைக்குழுத்தலைவர்,
தி.தி.தே.



திரு. ஜோதுல நெஹரு
சட்டமன்ற உறுப்பினர்,
உறுப்பினர்



திருமதி வி. பிரசாந்தி ரெட்டி
சட்டமன்ற உறுப்பினர்,
உறுப்பினர்



திரு. எம்.எஸ். ராஜு
சட்டமன்ற உறுப்பினர்,
உறுப்பினர்




டாக்டர் பனபாக லக்ஷ்மி
உறுப்பினர்



திரு. என். நர்ஷி ரெட்டி
உறுப்பினர்



திரு. ஜெ.பி. சாம்பசிவராவ்
உறுப்பினர்



திரு. என். சதாசிவராவ்
உறுப்பினர்



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
உறுப்பினர்



திரு. எ.எம். கோடேஸ்வர ராவ்
உறுப்பினர்



திரு. எம். ராஜசேகர கௌடா
உறுப்பினர்




திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி
உறுப்பினர்



திரு. ஆர்.என். தர்ஷன்
உறுப்பினர்

## பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்


திரு. வி.எம். சாந்தாராம்
உறுப்பினர்


திரு. பி. ராமமூர்த்தி
உறுப்பினர்


திருமதி டி. ஜானகி தேவி
உறுப்பினர்


திரு. பி. மஹேந்தர் ரெட்டி
உறுப்பினர்



திருமதி எ. ரங்கஶ்ரீ
உறுப்பினர்


திரு. பி. அனந்த சாய்
உறுப்பினர்


திருமதி சுசித்ரா எல்லா
உறுப்பினர்



திரு. எஸ். நரேஷ் குமார்
உறுப்பினர்


டாக்டர் அதித் தேசாய்
உறுப்பினர்


திரு. சௌரப் எச். போரா
உறுப்பினர்


திரு. ஜி. பானுபிரகாஷ் ரெட்டி
உறுப்பினர்


திரு. எஸ். சத்தியநாராயணா ஐ.ஏ.எஸ்.
ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை
ஆணையர் (வருவாய்),
செயலாளர் (எப்.ஏ.சி.)
பதவி அடிப்படையில் உறுப்பினர்


திரு. ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ்.
தி.தி.தே.
செயலாட்சித்தலைவர்
பதவி அடிப்படையில் உறுப்பினர்



06-11-2024 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவராக திருமலை ஆலயத்தில் பொறுப்பேற்ற பின்னர் திருவேங்கடமுடையானை தரிசித்த திரு. பி.ஆர். நாயுடு அவர்கள்



06-11-2024 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவராக பொறுப்பேற்ற திரு.பி.ஆர். நாயுடு தம்பதியினருக்கு ரங்கநாயக மண்டபத்தில் ஸ்வாமி பிரசாதத்தினை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சி.எச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



07-11-2024 அன்று திருமலையில் உள்ள டம்பிங் யார்டை பார்வையிட்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.பி.ஆர். நாயுடு அவர்கள் உடன் தி.தி.தே. உயர் அதிகாரிகள்



08-11-2024 அன்று திருமலையில் வேத விக்ஞானப்பீடத்திற்கு வருகை புரிந்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.பி.ஆர். நாயுடு அவர்களை வரவேற்கும் வேத விக்ஞானப்பீடத்தின் முதல்வர் அவர்கள்



08-11-2024 அன்று திருமலையில் பெரிய ஜீயர் மடத்திற்கு வருகை புரிந்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.பி.ஆர். நாயுடு அவர்களை மங்களாசாசனத்தோடு ஆசிர்வதித்த ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகள்



08-11-2024 அன்று திருமலையில் உள்ள எஸ்.வி. கோசாலையைப் பார்வையிட்டு, கோசேவை புரியும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர். நாயுடு அவர்கள் உடன் எஸ்.வி. கோசாலை இயக்குநர்



சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# அனுமனின் விஸ்வரூப சிறப்பு

– படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை, 8610819456.



ஸ்ரீமத் வால்மீகி இராமாயணக் காவிய சுந்தர காண்டத்தில் வரும் அனுமன் கடலைத் தாண்டும் படலத்தில் இராமாயணக் காவியத் தலைவன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் மனைவியான அன்னை சீதா தேவியைத் தேடி இலங்கை செல்லும் அனுமன் ராம நாம மகிமையால் விஸ்வரூப வடிவம் கொண்டு கடலைக் கடக்கும் போது ஏற்பட்ட தடைகள் மூன்றாகும்.


**சமுத்திர ராஜன்**

தன்னை உண்டாக்கிய ஸகரன் குலத்தை சேர்ந்த ஸ்ரீராமனுக்கு உதவி செய்வதாய் நினைத்து அவனின் தேவியைத் தேடிச் செல்லும் இராமனின் உதவியாளரான விஸ்வரூப அனுமன் சிறிது நேரம் தங்கி இளைப்பாறிச் செல்ல தன்னில் நிறைந்திருந்த மைநாக மலையை வெளியில் வர வைத்ததால் ஏற்பட்ட அன்புப் (தடை) பிடியிலிருந்து அன்னை சீதா தேவியைக் காணும் வரை எனக்கு ஓய்வு, களைப்பு கிடையாது என மைநாக மலையிடம் விண்ணில் பறந்த வண்ணம் சொல்லிச் சென்றது முதலாவது (அன்புத்) தடையைத் தகர்த்து அனுமன் கண்ட வெற்றியாகும்.


சூரியனுக்கு ஒப்பான நாகர் குல மாதா சுரசை தேவர்களின் வேண்டுகோளின்படி அனுமனின் பராக்கிரமத்தை உலகிலுள்ள அனைவரும் அறிய வேண்டும் எனும் நல்ல எண்ணத்துடன் கடல் வாழ் மிருகமான மகரயாளி வடிவம் கொண்டு விஸ்வரூப வடிவுடைய அனுமன் செல்லும் வான்வழியைத் தடுத்து, உன்னை விழுங்கப்போகிறேன் என்றும், அதிலிருந்து தாங்கள் ஒரு முறை தப்பித்தால் போதும் பிறகு நான் உங்களை தடுக்க மாட்டேன் என்றும் சொல்லி தன் வாயினைத் திறந்தாள் சுரசை. அதனைக் கண்ட அனுமன் தனது விஸ்வரூபத்தை உயர்த்திக்கொண்டே செல்ல செல்ல சுரசையும் தனது வாயினை பெரிதாக்கிக் கொண்டே சென்றாள். திடீரென்று அனுமன் தனது உடலை கட்டை விரல் அளவுடையதாக மாற்றிக் கொண்டு சுரசையின் வாயில் புகுந்து வெளியில் வந்தார். இதனைக் கண்ட சுரசையும் தான் அளித்த வாக்கின்படி அவரை மனதார வாழ்த்தி இராமதூதனுக்கு விடை தந்தாள் என்பது அனுமன் தனக்கு ஏற்பட்ட இரண்டாவது தடையைத் தகர்த்து கண்ட வெற்றியாகும்.




கடலில் வாழ்ந்து வருபவளும், நினைத்த மாத்திரத்தில் நினைத்த வடிவம் எடுக்கும் சக்தி உடையவளுமான ஸிம்ஹிகா எனும் அரக்கி தனது கோரப் பசியின் காரணமாக விண்ணில் ப(ா)ற(ய்)ந்து செல்லும் விஸ்வரூப வாயு புத்திரனின் நிழலைப் பற்றி இழுக்கத் தொடங்கினாள். தனது பலம், பலவீனமாவது யாரால் என அனுமன் கீழே பார்த்தால் உப்புக் கடலில் எழுந்து நிற்கும் விகாரமான முகத்தைக் கண்டார். இது வானர மன்னர் சுக்ரீவனால் சொல்லப்பட்ட மிக்க வீர்யமுள்ள விசித்திரமான பிராணி சாயாக்ராஹி அல்லவா என எண்ணினார். அரக்கி ஸிம்ஹிக கொடுமையான பசியினால் விஸ்வரூப அனுமனை உண்ண தனது குகை போன்ற வாயை திறக்க அதில் வஜ்ராயுதம் போல் மிக வேகமாக விஸ்வரூபத்துடன் அனுமன் பாய்ந்து அவளின் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியில் வந்து, விண்ணில் பறந்தான். சீதா தேவியைத் தேடும் பணியைத் தொடர்ந்தான் என்பதும், அரக்கி ஸிம்ஹிக வானர வீரன் அனுமனின் திருக்கரங்களால் வதம் செய்யப்பட்டதால் அவள் பிறப்பின் சாபம் நிவர்த்தி அடைந்து விண்ணுலகம் சென்றாள் என்பதும் வால்மீகி இராமாயணம் சொல்லும் வரலாறு. இது அனுமன் தனக்கு ஏற்பட்ட மூன்றாவது தடையைத் தகர்த்தி கண்ட வெற்றியாகும். (அரக்கி ஸிம்ஹிகாவின் மாய வடிவம் முதலையாக இருக்கலாம் என்பது சில சிற்ப ஆய்வாளர்களின் கருத்தாகும்).




இக்கட்டுரையுடன் வந்துள்ள தாங்கள் காணும் மிக அரிதான சிற்பங்கள் அமையப் பெற்றுள்ள கோயில்கள் வால்மீகி இராமாயணத்தில் வரும் கடல் தாண்டும் படலத்தில் முதல் தடை. அது மைநாகமலையால் வருவது. இந்த காட்சியுடைய சிற்பங்கள் பல கோயில்களில் உள்ளது. ஆதலால் அதனை இங்குப் பதியவில்லை. இரண்டாவது தடையாக வரும் நாகமாதா சுரசை கடல் மிருக மகரயாளியாகவும், அதன் வாயில் இருந்து தப்பிக்கும் வண்ணம் அனுமன் எழுந்தருளியுள்ள காட்சியுடைய சிற்பம் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலிலும், மற்றொன்று பெங்களூர் கலசிப்பாளையத்திலும் உள்ளது. மூன்றாம் தடையான முதலை வயிற்றைக் கிழித்து கொண்டு அனுமன் வெளிவரும் காட்சியுடைய சிற்பங்கள் திருச்சி மாவட்டத்தில் திருவரங்கம், திருவானைக்கா மற்றும் சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் ஆகிய கோயில்க ளிலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



முதலை வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளி வரும் விஸ்வரூப அனுமன் சிற்பத்தின் விளக் கத்தை கர்நாடகா மற்றும் ஆந்திராவில் வலம் வரும் அத்யாத்ம இராமாயண காவிய புராணம் இப்படி விவரிக்கிறது.

உலகப் புகழ் பெற்ற திருச்சி திருவரங்கம் கோயிலில் பல வரலாற்றுச் சிற்பங்கள் இருந்தாலும்

இதில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் சிற்பம் முதலை வயிற்றைக் கிழித்துக்கொண்டு அனுமன் வெளி வருவது போலவும், அருகில் ஓர் மங்கை வடிவம் வணங்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள சிற்பமாகும்.



**அத்யாத்ம இராமாயண காவிய யுத்த காண்டத்தில்...**

இந்திரசித்துக்கும், இலட்சுமணனுக்கும் இடையே நடைபெற்ற போரில், இந்திரசித் ஏவிய மின்னல் அஸ்திரத்தால், இலட்சுமணன் மூர்ச்சையாகி மயங்கி வீழ்ந்தார். இலட்சுமணனைக் காக்க, வழி என்னவென்று விபீடணன் வினவ இலங்கை மருத்துவர் சுசேனர் இமய மலையில் வளரும் சஞ்சீவினி எனும் மூலிகை மருந்துச் செடிகளைப் பறித்து வந்தால் பூரண நலம் பெறுவார் என்று சொல்ல, உடனே அதனைப் பறிக்க விஸ்வரூபத்துடன் அனுமன் புறப்பட்டார். அவரைக் கொல்ல காலநேமி என்ற பாம்பு அசுரனை இந்திரசித் அனுப்பி வைக்கிறார். (அத்யாத்ம இராமாயணத்தில் கூறப்படும் காலநேமி, ஆரண்ய காண்டத்தில் மாய மானாக வரும் மாரீசனின் மகன் ஆவார்).


அனுமன் இமய மலையின் கந்தமாதன மலை எனும் துரோண கிரியை அடைந்து சஞ்சீவினிச் செடிகளைப் பறிக்கையில் அவ்விடத்தில் போலித் துறவி வேடத்தில் வந்த காலநேமி, அனுமனை வரவேற்று, அருகில் உள்ள ஏரியில் குளித்து விட்டு வந்தால் சஞ்சீவினிச் செடிகளை எடுத்து செல்லலாம் எனக் கூறுகிறார். அதனை ஏற்ற அனுமன் ஏரியில் நீராடும் போது காலநேமி அரக்கன் ஏவிய மாய முதலை, அனுமனை விழுங்கி விட அனுமன் அம்முதலையின் வயிற்றைக் கிழித்து கொண்டு வெளியில் வந்து அதனைக் கொல்கிறார்.

அனுமனின் கரங்கள் பட்டு இறந்த முதலை தான்யாலி எனும் தேவலோக அழகியாக மாறினாள். அவள் தான் ஒரு முனிவரால் சாபம் பெற்ற வரலாற்றைக் கூறி தங்களுடைய உயர்ந்த இராம பக்தியினால் இன்று நான் பெற்ற சாபத்திலிருந்து நிவர்த்தி அடைந்தேன் எனக் கூறி தங்களை நீராடச் சொன்ன முனிவர் ஒருபோலி என்றும், உண்மையில் அவன் நாக அரக்கன் காலநேமி என்பதைச் சொல்லி கால நேமியைக் கொன்று, விடிவதற்குள் சஞ்சீவினிச் செடிகளைப் பறித்துச் செல்லுங்கள் எனக் கூறி விட்டு அவள் தேவலோகம் சென்றாள். அனுமனும் அவள் சொல்லியது போல் காலநேமியைக் கொன்று, சஞ்சீவினிச் செடிகளுடன் கூடிய மலைக்குன்றை தூக்கிக் கொண்டு இலங்கை திரும்பி இலக்குவனைக் காக்கின்றார் என்பது அத்யாத்ம இராமாயணத்தில் வரும் ஒரு படலமாகும்.



கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் உலா வரும் இந்த அத்யாத்ம இராமாயணத்தின்படி காலநேமி கதைப்பாத்திரம், வால்மீகி எழுதிய மூல இராமாயணத்தில் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கலைமிகு சிலை சிற்பங்களை இரசிப்போம். அதனைப் பாதுகாக்க முயற்சிப் போம்.

**தொடரும்....**




சென்ற இதழின் தொடர்ச்சி...

# பழம் பெரும் கார்த்திகை தீபத் திருவிழா

– பனையபுரம் அதியமான்,
சென்னை. 9444800935

பஞ்ச பூதத் தலங்களில் அக்னித் தலமாக விளங்குவது திருவண்ணாமலை ஆகும். தேவாரப் பாடல்களில் இறைவன் “அண்ணல்” என்றே அழைக்கப்படுகின்றார். அண்ணலின் ஒளி வடிவமே மலையாக உருவெடுத்தது என்பர். அதன் காரணமாகவே, மக்கள் இந்த மலையை “அண்ணல் மலை” என்று அழைத்தனர். அண்ணல் மலை என்ற சொல்லே காலப்போக்கில் மருவி “அண்ணாமலை” என்று ஆனது. அண்ணாமலை என்பதற்கு அணுக முடியாத மலை என்றும் பொருள் உண்டு.



## அண்ணாமலையார் கார்த்திகை தீபம்

அண்ணாமலை கார்த்திகை தீப தரிசனம் ஓர் அற்புதமான அனுபவமாகும். கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தன்று லட்சக்கணக்கான அடியார் பெருமக்கள் அண்ணாமலையார் திருக்கோயில் நோக்கிப் படையெடுப்பார்கள். சரியாக அன்று மாலை ஆறு மணிக்கு முழு நிலவு வானில் எழுந்து கோபுர உச்சியைத் தடவி நிற்கும். அப்போது, திருக்கோயில் உள்ளே இருந்து பஞ்சமூர்த்திகளும் மண்டபத்திலே எழுந்தருள்வார்கள். அவர்கள் பார்வை அனைத்தும் அண்ணாமலையை நோக்கி இருக்கும். அப்போது அதிர்வெடி ஒன்று கிளம்பும். வானை நோக்கி ஐந்து கற்பூரம் ஆரத்தி தட்டுகளை அர்ச்சகர்கள் உயர்த்திப் பிடிக்க, அதே சமயத்தில் அண்ணாமலையின் உச்சியிலே உள்ள கற்பூர தீபக் கொப்பரையிலிருந்து தீபச்சுடர் எழுந்து காட்சி தரும். அப்போது “அண்ணாமலைக்கு அரோகரா” என்று பக்தர்கள் எழுப்பும் கோஷம் விண்ணைப் பிளக்கும்.

## சொக்கப்பனை

தீபத் திருவிழாவின் முக்கிய அம்சமாக விளங்குவது சொக்கப்பனை ஏற்றுவது. கற்பக விருட்சம் எனும் பனை மரத்தை அக்னி வடிவம் என்றும் கூறுவார்கள். சில தலங்களில் பனைமரம், பொற்பனை எனக் கூறுப்படுகின்றது.

கார்த்திகை தீபத் திருநாளில் பனைமரத்தை வெட்டி எடுத்து ஆலயத்தின் முன்புறத்தில் நடுகின்றனர். அதைச் சுற்றி 15 அடி உயரத்திற்கு பனை ஓலைகளை கொண்டு கூம்பு போல அமைக்கின்றனர். மாலையில் ஆலயங்களில் உச்சியில் தீபம் ஏற்றியதும், பஞ்ச மூர்த்திகளுக்கு தீப ஆராதனை செய்து கோயிலுக்கு முன்புறம் அமைக்கப்பட்டிருக்கும் இந்த கூம்புகளுக்கு முன்பு எழுந்தருளுவார்கள். ஸ்வாமிக்கு தீபாராதனை செய்து அந்தச் சுடரால் இந்த சொக்கப் பனையைக் கொளுத்துவர். சுடர் விட்டு எரியும் அந்த ஜோதியை சிவமாகவே எண்ணி வழிபடுவர். இது அக்னி மய லிங்கமாகும். அந்த நெருப்பிலிருந்து பெறப்படும் கரியை தைலத்துடன் சேர்த்து ரகைஷயாக அணிவர். சாம்பலை எடுத்துக் கொண்டு வயலில் இடுவர். சில தலங்களில் இரட்டை சொக்கப்பனை கொளுத்தியும் வழிபடுவர்.



ஆனால் அக்னித்தலமான திருவண்ணா மலையில் சொக்கப்பனை எரிக்கும் வழக்கம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கார்த்திகை தீபத்திருநடனம்

சிவபெருமான் எந்நேரமும் திருநடனம் புரிந்து கொண்டிருக்கின்றார். அந்த நடனமே உலக உயிர்களின் இயக்கத்திற்கு காரணமாக அமைந்துள் ளது. அவர் சூரியன், சந்திரன், அக்னி ஆகிய முச்சுடர் மண்டலங்களின் நடுவே நின்று நடனம் ஆடுவது தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறது.

இந்த வகையில் சிவபெருமான் உயிர்களுக்கு அழியாத முக்தி ஆனந்தத்தை அருளும் திருநடனத்தை அக்னி மண்டலத்தின் நடுவே நின்று ஆடுகின்றார். இதை இறைவன் கார்த்திகை தீபத் திருநாளில் திருவண்ணாமலையில் ஆடுகின்றான் எனப் புராணம் கூறுகிறது.

### ஐம்பெரும் கார்த்திகை தீபம்

நமக்குத் தெரிந்தது ஒரு நாள் மட்டும் கொண்டாடப்பட்டு வரும் கார்த்திகை தீபம் ஆகும். ஆனால் பழங்காலந்தொட்டு ஐந்து நாட்கள் கொண்டாடப்படுவதே கார்த்திகை தீபத் திருநாளாகும்.

முதல் நாள் பரணி தீபம். இது காளிக்குரிய நாளாகும். ஆதி நாளில் காளி தேவியை வழிபடும் நோக்கத்தில் பரணி தீபத்தைக் கொண்டாடினர்.

கார்த்திகை மாதக் கிருத்திகை நட்சத்திரத்தில் மலை உச்சியில் விளக்கேற்றுவதும், இல்லங்கள் தோறும் ஏராளமான விளக்குகளை ஏற்றுவதும் சிவபெருமானைக் குறித்துக் கொண்டாடும் கார்த்திகை தீபத் திருவிழாவாகும். இதனை அண்ணாமலையார் தீபம் என்று அழைப்பர்.

மூன்றாவது நாள் ரோகிணி நட்சத்திரத்தில் வைணவர்கள் தீபம் ஏற்றி வழிபடுவர். இதை விஷ்ணு தீபம் என்று அழைப்பர். இது விஷ்ணு ஆலயங்களில் பெரிய விழாவாக கொண்டாடப்படுகின்றது.

நான்காவது நாள் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் கொண்டாடப்படுவது நாட்டு கார்த்திகை ஆகும். இந்நாளில் தங்கள் வீட்டுப் பெண்ணையும் மருமகனையும் வீட்டுக்கு அழைத்துச் சிறப்பு செய்து விருந்து வைப்பர். இந்நாளில் குல தெய்வங்கள் வீட்டிற்கு வந்து அருள் புரிவதாக நம்பப் படுகிறது.

ஐந்தாம் நாள் திருவாதிரை நாள் தோட்டக் கார்த்திகை ஆகும். இதில் வயல்கள், தோட்டங்கள், கிணற்றடியில் தீபங்கள் ஏற்றி வழிபடுவர். இது கிராமங்களில் உலவும் பல வகை தெய்வங்களுக் கான வழிபாடாக போற்றப் படுகின்றது. இவ்வழக்கம் இன்று சற்றே மறைந்து வருவது வருத்தத்திற்கு உரியது.

### கார்த்திகைப் பெண்களும் கந்தப் பெருமானும்


முருகன் வழிபாட்டில் கார்த்திகை, விசாகம், உத்திரம் என்ற மூன்று நடசத்திரங்கள் சிறப்பு வாய்ந்தவை ஆகும். அவற்றில் விசாகத்தை முருகன் தோன்றிய நட்சத்திரமாகக் கொண்டாடுவர். வைகாசி மாத விசாகம் பௌர்ணமியுடன் கூடி வரும் அந்நாளில் ஆறுமுகப்பெருமான் பன்னிரு திருக்கரங்கள் கொண்ட ஞானமூர்த்தியாக சரவணப் பொய்கையில் திருவவதாரம் செய்தார்.

அதே போல விசாக முருகப் பெருமானை வளர்த்தவர்கள் கார்த்திகை பெண்கள். இவர்கள் அக்னியின் அம்சத்துடன் தோன்றியவர்கள். ஞானம் நிறைந்தவர்கள். வெற்றியைத்தரும் அதி உன்னத

### 2025, ஜனவரி மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 06–12 | ஆண்டாள் நீராட்டோத்ஸவம். |
| 08–12 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 10 | திருவேங்கடமுடையான் வைகுண்ட வாயில் தரிசனம் |
| 11 | ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி, சூரிய உதயத்திற்கு முன்னதாக திருமலையப்ப ஸ்வாமி சக்கர ஸ்நானம் |
| 13 | போகிப்பண்டிகை, போகித்தேர், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆருத்ரா தரிசனம் |
| 14 | பொங்கல் பண்டிகை. |
| 15 | மாட்டுப் பொங்கல், கோதா பரிணயோத்ஸவம் |
| 17 | திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம் |
| 29–பிப்.06 | ஆ.மா. தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |









வீராங்கனைகளாகப் போற்றப்படுகின்றனர். இந்நாளில் விரதம் இருந்து முருகனை வழிபடுவோர் பெரும் செல்வத்தை அடைவர் என்று கூறப்படுகிறது.

## மாவளியோ மாவளி

கார்த்திகைத் திருநாளில் தீபம் ஏற்றிய பின் மாவளி சுற்றுதல் என்ற விளையாட்டு நடைபெறும். இது தமிழ்நாட்டுக்கு உரியதாகும். பனம் பூளை எனப்படும் பனம் பூக்கள் மலரும் காம்பை நன்கு காய வைத்து காற்று புகாமல் பள்ளத்தில் வைத்து தீயிட்டு கரியாக்குவர். பின் அதை அரைத்து சலித்து துணியில் சுருட்டிக் கட்டுவர். பனை ஓலை மட்டையில் மூன்றை எடுத்து அதன் நடுவில் கரித்தூள் கருணையை வைத்து இருபுறம் கட்டுவர். அதை உரி போல நீண்ட கயிற்றில் கட்டி, துணிப்பந்தில் நெருப்பு வைத்து கனலை ஏற்படுத்துவர். கயிற்றைப் பிடித்து வட்டமாகும் பக்கவாட்டிலும் சுற்றுவர். அப்போது அதிலிருந்து எழும் தீப்பொறிகள் சிதறிக் கொண்டு ஒரு எரி நட்சத்திரம் வேகமாக சுழன்று ஓடுவது போல காட்சி அளிக்கும். அப்பொழுது "மாவளியோ மாவளி" என சத்தமிடுவர். இது சிபிச் சக்கரவர்த்தி யின் ஜதீகத்தில் கூறப்படும் புராணமாகும்.

மேலும், மகாபலி சக்கரவர்த்தி தீபத்திருநாளில் மண்ணுலகம் வந்து தீப அலங்காரங்களைக் கண்டு மகிழ்கின்றார் என்றும் கூறுகின்றனர். இவர் பெயரைச் சொல்லி அழைப்பதே மாவளியோ மாவளி.

சிவாலயங்களில் விளக்கேற்றி பணி செய்வது பெரும் பேறாகும். அந்த வகையில் சிவபெருமானின் திருக்கோயில்களில் விளக்கு ஏற்றும் பணி செய்து பேறு பெற்ற மூவர் குறித்துப் பெரிய புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. திருவாரூரில் நமிநந்தியடிகள் நீராலேயே விளக்கு எரியச் செய்தவர். சிதம்பரத்தில் கனம் புல்லர் தன் தலைமுடியையே திரியாக விளக்கிட்டு எரித்தவர். திருவொற்றியூரில் கலிய நாயனார் உதிரத்தைக் கொண்டு விளக்கு ஏற்ற முயன்றவர்.

## தீபத்திருநாளில் மூன்று முக்கியத் தலங்கள்

தீபத்தைப் பிரதானமாகக் கொண்டு புகழ் பெற்ற மூன்று ஆலயங்கள் திகழ்கின்றன. முதலாவதாகத் தமிழ்நாட்டில் உள்ள திருவண்ணாமலை. இங்கே மலையிலே மகாதீபம் ஏற்றப்படுவது அனைவரும் அறிந்ததே. அதேபோல கேரள மாநிலம், பத்தனம் திட்டா மாவட்டத்தில் அமைந்துள்ள சபரி மலையில் மகர ஜோதி பொன்னம்பல மேட்டின் மலை மீது ஏற்றப்படுவதும் மற்றொரு முக்கிய விழாவாகும்.

மூன்றாவதாக தமிழ்நாட்டில், கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வடலூர் சத்திய ஞான சபையில் தைப்பூசத் திருநாளில், வடலூர் ராமலிங்க சுவாமிகள் ஏற்றி வைத்த விளக்கின்

முன் உள்ள ஏழு திரைகள் விலக்கப்பட்டு அன்று பூரண ஜோதி தரிசனம் காட்டப்படும்.

## சங்க இலக்கியங்கள் போற்றும் தீப வழிபாடு

சங்க இலக்கியங்களும், வேதங்களும் இந்த தீப வழிபாட்டின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துவதால், இதன் தொன்மையை நாம் அறிய முடிகிறது.

ரிக் வேத காலத்திலேயே கடவுளை ஒளியாகக் கருதி வழிபட்டனர் என்ற குறிப்பு காணப்படுகிறது. இந்த ஒளி வழிபாடு உபநிஷத்திலும், பகவத் கீதையிலும் கூறப்பட்டு உள்ளது. இதைத் தொடர்ந்து, நாயன்மார்களும், ஆழ்வார்களும் தீப ஒளியைப் போற்றிப் பாடியுள்ளனர்.

*''கார்த்திகை விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய்''*
எனத் திருமயிலைத் தேவாரப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் பாடியிருப்பது, கார்த்திகை தீபப் பெருவிழாவின் பெருமையைப் பறைசாற்றுகின்றது.

*''போதாந்தப் புண்ணிய போற்றி சய சய போற்றி யெனும்*
*வேதாந்த வீட்டின் விளக்கே பராபரமே''*

எனத் தாயுமானவர், விளக்கின் ஒளியைப் போற்றுகின்றார்.

*''நெஞ்சுக் கிருள்கடி தீபம் அடங்கா நெடும்பிறவி*
*நஞ்சுக்கு நல்ல அமுதம் தமிழநன் னூல்துறைகள்''*

என தீபத்தைத் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி பாடுகின்றது.

*''தீப மங்கள சோதி நமோ நம:*
*தூய அம்பல லீலா நமோ நம:''*

என அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

*''கையேந்து ஐ அகல் நிறை நெய் சொரிந்து''*

என நெய் ஊற்றி தீபமேற்றியதை, நெடுநல்வாடை கூறுகிறது.

*''அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்''*

எனும் பாடலில் நள்ளிரவில் வீதிகள் தோறும் விளக்குகளை மாலைபோலத் தொங்கவிட்டு வெற்றியுடைய மூதூரில் (திருவண்ணாமலை) விழா கொண்டாடியதை புலவர் நக்கீரர் கூறுகின்றார்.

*''அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்*
*செல்சுடர் நெடுங்கொடி போல,*
*பல்பூங் கோங்கம் அணிந்த காடே''*

என நற்றிணை பாலைத்திணையில், புலவர் பெருங் கடுங்கோ கூறியுள்ளார்.

*''நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்டநாள் விளக்கு''* என கார் நாற்பது கூறுகிறது. களவழி நாற்பதிலும் கார்த்திகை தீபம் பாடப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையில், விளக்கு வழிபாட்டைக் குறிப்பிடுகிறார் நக்கீரர்.

*''இரும்புசெய் விளக்கின் ஈர்த்திரிக் கொளீஇ*
*நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது...''*

சிவனின் நெற்றிக்கண்ணில் உதித்த அக்னிப் பூவான முருகனை கிருத்திகை நன்னாளில் பழந்தமிழர் விளக்கேற்றி வழிபட்டனர். பழந்தமிழகத்திலேயே திருமால் வழிபாடும், விளக்கு வழிபாடும் இருந்ததை இலக்கியங்கள் சான்று கூறுகின்றன.

கார்த்திகை மாதம் முழுவதும் தீபங்களை ஏற்ற இயலவில்லை என்றாலும் இந்த கார்த்திகை தீபத்திருநாளில் நாம் நம் இல்லம் தோறும் தீபங்களை ஏற்றி வழிபடுவோம்.

*தீபத்தை தரிசித்து வாழ்வில் வளம் பெருவோம்.*

## மங்கள சுலோகங்கள்



*ச்ரிய:காந்தாய கல்யாணநிதயே*
*நிதயேர்த்தினாம் |*
*ஶ்ரீவேங்கடநிவாஸாய*
*ஶ்ரீநிவாஸாய மங்களம் ||*

**லக்ஷ்மி காந்தனும், மங்களத்தின் உறைவிடமானவனும், (வேண்டுவோரின்) செல்வநிதியாக விளங்குபவனும், வேங்கடத்திற்கு அதிபதி ஆன ஶ்ரீநிவாஸனுக்கு மங்களம்.**

# குறுக்கெழுத்துப் புதிர் -101

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | 3 | | | 4 |
| ■ | ■ | | | | | 5 | | | ■ | | |
| | | 6 | | | | | | | | | |
| ■ | 7 | | | | ■ | | 8 | | 9 | | |
| | | 10 | 11 | 12 | | | | | | | |
| 13 | | | | | ■ | ■ | ■ | | | 14 | |
| 15 | ■ | | | | 16 | | | | | ■ | |
| | | | | | | ■ | 17 | | | | |
| | | 18 | | | | 19 | | | | | |
| | | | | | 20 | ■ | 21 | | | | |
| | 24 | | 22 | 23 | | ■ | ■ | ■ | ■ | ■ | |
| 25 | | | | | | | | | | | 26 |

**தொகுப்பு : திரு.எம். ராஜன், காட்டுப்பாக்கம்.**

புதிருக்கு விடை அறிய 45ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. .........(5) குடக்கூத்தன்.
3. இராமன் இருக்குமிடம்.....(4)
5. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பழம் பெருமை மிக்க ஊர்......(3)
6. ..(8) யோடு செங்கழு நீரிருவாட்சி.
7. .....(4) கடல் கடைந்த மாதவனைக் கேசவனை.
8. மாரீசன்.....(4) வடிவில் வந்தான்.
11. கருப்பூரம் நாறுமோ...(5) நாறுமோ?
13. .......(5) மணம் பாம்புக்கு மிகவும் பிடிக்கும்.
16. .....(5)ப் பெருமாள் திருநின்றவூர் திவ்ய தேசப் பெருமாள்.
17. ....(4)ப்பாடி (கோகுலம்) வட நாட்டுத் திருப்பதி.
19. திரு......(5) சோழநாட்டு திருப்பதி.
21. மங்கையராய்ப் பிறக்க ...(4) செய்திருக்க வேண்டும்.
22. வடநாட்டு திருப்பதி .....(3)
25. .....(11) என்பது அகோபிலம்.

## வலமிருந்து இடம்

03. ....(5) அமலன் என்கோ - திருவாய் மொழிப் பாசுரம்.
05. ....(5) தனி முதல்வனை - திருவாய் மொழிப்பாசுரம்.
06. ...(3) யோங்கு தண் திருவேங்கட முடையாய்.
10. ஒரு ஜீவ நதி....(3)
20. திரு.....(3) மலைநாட்டு திருப்பதி.

## மேலிருந்து கீழ்

2. குசேலனின் மறுபெயர்...(4)
3. மாலையில் மலரும் பூ....(6)
4. திவ்ய தேசங்களில் ஒன்று.... (8)
6. ........(7) குளத்தில் மலரும். லக்ஷ்மி வாசம் செய்யும் பூ.
9. வாமனாவதாரத்திற்கு காரணமானவர்....(3)
11. ....(5) கடவுளெந்தை.
12. வெண்மையான மணம் பரப்பும் மலர்....(4)
15. .....(6) குளிர் மழை காத்தவன்.
16. ....(5) யணன்.
18. .....(3) ஆண்டாள் திருநட்சத்திரம்.

## கீழிருந்து மேல்

14. ....(5)ல் திவ்ய தேசம்.
23. திருத் ....(4) வடநாட்டு திருப்பதி.
24. காஞ்சியில் உலகளந்தப் பெருமாள் கொலுவீற்றிருக்கும் திவ்ய தேசத்தின் பெயர்..... (4).
26. சோளிங்கர் .... (5)கை திவ்யதேசம்.

திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும்.
அனைவரையும் “கோவிந்தா ” என்றே அழையுங்கள்.



108 திவ்ய தேச வைபவம்

# திருப்புட்குழி

## (செட்டிசத்திரம்)





– உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.


**புராண வரலாறு :**

ஜடாயுவிற்கு (தர்ப்பணம்) செய்யும் முறையில், இத்தலத்து எம்பெருமான் விஜயராகவப் பெருமாள் வில்லின் நுனியினால், நிலத்தைக் கீறி உண்டாக்கிய திருக்குளம், திரு+புள்+குழி என்று பெயர் பெற்றது.

இதனை ஜடாயு தீர்த்தம் என்பர். வடமொழியில் "க்ருத்ர புஷ்கரணி" என்று கூறுவர். முதலில் திருக்குளத்திற்கு அமைந்த பெயரே திவ்ய தேசத்திற்கும் அமைந்தது. திருப்புட்குழியின் தல வரலாறு வாமன புராணத்தில், "க்ருத்ர புஷ்கரணி க்ஷேத்திர மகாத்மியம்" என்ற தலைப்பில், பரத்வாஜ முனிவருக்குப் பிருகு முனிவர் கூறியதாக அமைந்து உள்ளது. வாமன மூர்த்தி தவம் செய்த இடம் என்றும், கௌசிக முனிவரும் தேவர்களும் எம்பெருமானின் அருள் வேண்டித் தவம் செய்த இடம் என்றும், சொல்லப்படுகிறது. பிருகு முனிவரை, பரத்வாஜ முனிவர் சந்தித்து வணங்கி, தான் சென்று நீராடி வந்த தலங்களையும், தீர்த்தங்களையும் கூறி, இறுதியாக உலக வாழ்க்கை என்ற பெருங்கடலில் நீந்திக் கரை காண முடியாமல் தவிக்கும் மக்கள், துன்பம் நீங்கி, இன்பம் அடைவதற்கான வழியைக் கூறுமாறு, பிருகு முனிவரிடம் வேண்டினார்.

அப்போதுதான் இத்தலத்தின் அளவற்ற பெருமையைப் பிருகு முனிவர் கூறத் தொடங்கினாராம். இராமாவதாரத்தில் தசரதனுக்கு எம்பெருமான், நான்கு மைந்தர்களாக அவதரித்து கைகேயியின் கூற்றுப்படி, அரசைத் துறந்து, கானகம் வந்ததையும்,

*"மாமன்னரும் மென்நோக்கி, வைதேகி*
*இன்துணையா*
*இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு*
*பின்செல்ல"*

என்றபடியும், பரத நம்பிக்குப் பாதுகையை அருளி, தண்டகாரணியம் புகுந்து, மாரீசன் என்கிற மாயமானைக் கொன்று, ஜடாயு பிராட்டியைக் காக்கும் முயற்சியில், இராவணனுடன் சண்டை செய்ய, சிவபிரான் கொடுத்த வாளினால், ஜடாயுவின் சிறகுகளை இராவணன் வெட்ட, இதனைக் கண்ட பிராட்டி, கலங்கி, குற்றுயிராகக் கிடக்கும் ஜடாயுவை நோக்கி, இராமன் வரும் வரை உயிர் தாங்கி இருந்து தன்னை இராவணன் கவர்ந்து சென்றதைக் கூற வேண்டும் என்று வேண்டவே, ஜடாயுவும் அவ்வேண்டுகோளை ஏற்கிறார். சீதையைத் தேடிச் சென்ற இராமனும், இலக்குவனும் வழியில் ஜடாயுவைக்கண்டு வருந்தி, ஜடாயுவின் மூலம் செய்தி அறிந்து கலங்கிய போது ஜடாயு உயிர் நீங்கிப் பரமபதம் எய்தினார்.

அத்தகைய பெரிய உடையாரைத் தகனம் செய்யும் முறையில் எம்பெருமான் தனது வலது தொடையில் ஜடாயுவின் திருமேனியை எழுந்தருளப் பண்ணி, இளைய பெருமாளைக் கொண்டு, நெருப்பைக் கொணரச் செய்து, அதனை ஜடாயுவின்

திருமேனியில் சேர்த்தபோது, தீ கொழுந்து விட்டு எரியும் அதன் வெப்பம் பொறுக்காது, திருமகள் (ஸ்ரீதேவி) பெருமாளின் வலப்பக்கத்தைக் கைவிட்டு, இடப்பக்கம் வந்து விடுகிறாள். எதையும் பொறுக்கும் நிலமகள் (பூதேவி) இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கம் வந்து விடுகிறாள். இதனை,

*தக்ஷிணம் பாகம் உத்ஸ்ருஜ்ய ததா க்ஷீரோதஸம்பவா*
*ஸர்வம் ஸஹாபி தஸ்யைவ த்யத்த்வா தத்பாக மாதராத்*
*பூதேவி தக்ஷிணம் பாகம் தஸ்த்தௌ ஸ்மேரமுகீ ததா:*

என்கிறது புராணம். ஜடாயு பரமபதம் செல்ல, எம்பெருமான் தன் வில்லின் நுனியினால் உண்டாக்கிய புனித நீரில், ஜடாயுவிற்கான ஈமக்கடன்களைச் செய்கிறான். அப்போது உண்டான தீர்த்தத்திற்கு ஜடாயு தீர்த்தம் என்று பெயர் அருளி, அத்தீர்த்தத்தின் பல வகையான பெருமைகளை எம்பெருமான் தானே கூறவும் மேல் உலகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பெரிய உடையார், எம்பெருமான் அர்ச்சை நிலையில் இருபெருந் தேவியரோடு இத்தலத்தில் எழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்ட அன்று முதல் திருப்புட்குழியில் ஜடாயுவிற்கு அருளும் நிலையைக் காட்டும் முறையில் எம்பெருமான் விஜயராகவப் பெருமாளாய் எழுந்து அருளி உள்ளான். இந்த வரலாற்றைப் பிருகு முனிவர் வாயிலாக அறிந்த பரத்வாஜர் இத்திவ்ய தேசத்தை வந்து அடைகிறார்.

**சிறப்புகள் :**

ஸ்ரீவைணவ சமயத்தில், புராணங்களிலும், இதிகாசங்களிலும் வந்துள்ள நாமாக்களைச் சொல்லாமல் அவர்களுக்கு ஏற்ற புனிதமான மாற்றுச் சொற்களைக் கொண்டு கூறும் ஸம்பிரதாயம் உள்ளது. அனுமனை "சிறிய திருவடி" என்றும்,

# திருப்பதியில் கந்த சஷ்டி

**சூரபதுமன் சிவபெருமானிடம் "தன் சக்தியல்லாது வேறு சக்திகளால் அழிவே இல்லை" என்ற வரம்பெற்ற ஆணவத்தால் தேவர்களைத் துன்புறுத்தினான். துன்பம் தாங்காத தேவர்கள் சிவ பெருமானிடம் முறையிட, தனது நெற்றிக் கண்ணைத் திறந்து முருகனைப் பிறப்பித்தார். அதனை,**

*"அருவமும் உருவமும் ஆகி, அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு அது ஓர் மேனியாகி,*
*கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே*
*ஒருதிருமுருகன் வந்து, ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய"*

**என்று கந்தபுராணம் சுட்டுகிறது. இதில் முருகன் சிவபெருமானின் அவதாரமே என்பது புலனாகிறது. அழகாய் இருப்பதால், "முருகன்" என்றும், தருப்பை வனத்தில் தோன்றியதால் "சரவணன்" என்றும், கார்த்திகைப் பெண்பால் உண்டதால் "கார்த்திகேயன்" என்றும், ஆறுமுகம் உடையதால் "சண்முகன்" என்றும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.**

சுப்ரமண்ய சஷ்டி, கந்த சஷ்டி எனப் போற்றப்படும் சஷ்டி திருவிழா திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் மிகவும் சிறப்பான முறையில் 07-12-2024 அன்று நடைபெறுகிறது.





கருடனை "பெரிய திருவடி" என்றும், குகனை "குகப் பெருமாள்" என்றும், சீதையைக் காக்கும் பணியில் தன் உயிரையே காணிக்கையாகக் கொடுத்த ஜடாயுவை "பெரிய உடையார்" என்றும் அழைப்பர். இராமனால், இறுதிக்கடன்கள் செய்யத்தக்க பெருமை, பெற்று எடுத்த தந்தையாகிய தசரதனுக்கே கிடைக்க வில்லை. ஆனால் பறவையாகிய ஜடாயு தனது பெருந்தியாகத் தால், பெரிய உடையார் என்று போற்றப்படுகிறார். ஜடாயுவுக்குத் திருக்கோயில் அமைத்து அத்திவ்ய தேசத்திற்கும் ஜடாயுவின் தொடர்பான நாமமும் அமந்துள்ளது.

இத்தலத்து எம்பெருமானான விஜயராகவன் திருவீதி உலா வரும் ஒவ்வொரு நாளிலும், முதலில் இராமாநுஜருக்கு சடாரி சாதித்து பிறகு, பெரிய உடையார்க்கு சாதிக்கப்படுகிறது. நூற்றெட்டுத் திவ்ய தேசங்களில், ஜடாயுவுக்கு சிறப்பு இங்கு மட்டும் தான். ஆசார்யர்களில், முதன்மை ஆனவராகிய இராமாநுஜர், யாதவப் பிரகாசர் என்ற அத்வைத குருவிடம் வேதாந்த பாடங்களைக் கற்ற இடம் இதுவே. "கப்யாஸம்" என்று தொடங்கும் வேத வாக்யத்துக்கு யாதவப் பிரகாசர் தவறான பொருளைக்கூறிய போது இராமாநுஜர் கண்ணீர் உகுத்து, அதற்கான சிறந்த பொருளை எடுத்துக் காட்டிய இடம் இதுவே. ஸ்ரீமணவாள மாமுனிகளின் சீடர்களாகிய அஷ்டதிக் கஜங்களில் கோயில் அண்ணன், எறும்பியப்பா என்பவர்களும், பிரதிவாதி பயங்கரம் அண்ணாவும் இத்தலத்தில் வாழ்ந்தவர்கள்.

குருபரம்பரை பிரபாவம் என்ற நூலை அருளிய "பின்பழகிய பெருமாள் ஜீயர்" என்பவர் அவதரித்த இடம் இது. கவிதார்க்கிக சிம்மம் என்று பெயர் பெற்ற ஸ்வாமி தேசிகன் "பரமார்த்த ஸ்துதி" என்பதாக இந்த எம்பெருமான் மீது பாடியுள்ளார். சமரபுங்கவன் என்றும், ஆகவ புங்கவன் என்றும், ரணபுங்கவன் என்றும், இத்தலத்து எம்பெருமானை அவர் அழைக்கிறார். எப்போதும் எம்பெருமானின் வலபக்குதியில் விளங்கும் திருமகள், பறவைக்கு இறங்கிப் பிதுர்க் கடன் செய்யும் பெருமாளின் அருள் வெம்மையைத் தாங்க இயலாமல், தன் நிலை கலங்கி, இடப்பக்கத்தில் இங்கே தனிக் கோயிலில் நாச்சியாராய்த் திகழ்வது குறிப்பிடத்தக்கது. அது போன்றே இடப்பக்கத்தில் விளங்கும் பூதேவி இவ்வூரில் எம்பெருமானின் வலப்பக்கத்தில் விளங்குகிறாள்.



| | | |
|---|---|---|
| பெருமாள் | : | விஜயராகவப் பெருமாள், போரேறு, ஆகவபுங்கவன் (நான்கு தோள்களுடன் கிழக்கு நோக்கிய அமர்ந்தத் திருக்கோலம்) |
| தாயார் | : | மரகதவல்லித்தாயார் (தாயார் சந்நிதி, பெருமாளின் இடப்புறம்) |
| தீர்த்தம் | : | ஜடாயு தீர்த்தம். |
| விமானம் | : | விஜயகோடி விமானம், வீரகோடி விமானம் என்றும் கூறுவர். |
| ப்ரத்யக்ஷம் | : | ஜடாயு. |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |

**த்யானச்லோகம் :**

*"நெருப்புக் கண்ணினால் உலகு எங்கணும் நீறு*
*செய்வான் பொருப்பைக் கரத்தால் எடுத்து, எண்திசைப்*
*போதகத்தின் மருப்பு உற்றிடவே பொருதான் உயிர்*
*வவ்வி, வண்மைத் திருபுட்குழி வாழும் இராகவ தேவன் வாழி"*

– திவ்யதேச வாழ்த்துப் பாசுரம்

*ச்லாக்யேஸ்மிந் குஸுமாவடே மரகத ஸ்ரீவீர*
*கோட்யாஹ்வய*
*ஸ்ரீமத் புண்ய விமான மத்ய விஜய ஸ்ரீராகவ;*
*ப்ராங்முக:*
*ஆஸீநச்ச ஜடாயு தீர்த்தவிலஸத் தீரே ஜடாயோ:*
*புரெ*
*துஷ்ப்ராபா சயபத்ம ஸம்பவபதம், ப்ராதாத் தயா*
*வாரிதி:*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

பாசுரம்

*அலங்கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு*
*அழியுமால் என் உள்ளம் என்னும்*
*புலங் கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்*
*போதுமோ நீர்மலைக்கு? என்னும்*
*குலங் கெழு கொல்லிக் கோமளவல்லி*
*கொடியிடை நெடுமழைக் கண்ணி*
*இலங்கு எழில் தோளிக்கு என் நினைந்து*
*இருந்தாய்? இடவெந்தை எந்தை பிரானே*

– திருமங்கையாழ்வார்

*மால் வேழமும், அரவும் மாயையும் வெற்பும் கடலும்*
*மேல் வீழ் படையும் விடமும் போய்ப் - பாலன்*
*நெருப்பு உட் குழி குளிர நின்றதும் கேட்டுஓதார்*
*திருப்புட்குழி அமலன் சீர்*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

*841. ஓம் க்ருஸ: நம:*

லகிமா என்கிற ஐச்வர்யம் உள்ளவன்.

*ஓம் தநேச்வரீ: நம:*

தனத்தை விரும்புவோர்க்கு அதை அளிக்கும் ஈச்வரீ.

*842. ஓம் ஸ்தூல: நம:*

“ப்ராப்தி” என்கிற ஐச்வர்யம் உள்ளவன்.

*ஓம் துர்மர்ஷணீ: நம:*

சீற்றமே அடையாதவள்.

*843. ஓம் குணப்ருத் நம:*

“ஈசித்வம்” என்கிற ஐச்வர்யம் உள்ளவன்.

*ஓம் ஸுசரிதா: நம:*

நல்ல நடத்தைக்குக் காரணமாக இருப்பவள்.

*844. ஓம் நிர்குண: நம:*

“வசித்வம்” என்கிற ஐச்வர்யம் உள்ளவன்.

*ஓம் போதா: நம:*

நல்ல அறிவை உண்டாக்குபவள்.

*845. ஓம் மஹாந் நம:*

“ப்ராகாம்யம்” என்கிற ஐச்வர்யம் உள்ளவன்.

*ஓம் சோபா: நம:*

அழகைத்தருபவள்.

*846. ஓம் அத்ருத: நம:*

விச்வரூபஸ்ரூவன்.

*ஓம் ஸுவர்ச்சலா: நம:*

சரீரகாந்தியை ஏற்படுத்துபவள்.

*847. ஓம் ஸ்வத்ருத: நம:*

தன்னாலேயே தான் தாங்கப்படுபவன்.

*ஓம் யமுநா: நம:*

அடக்கமுள்ளவர்களை உயரத் தூக்கி விடுபவள்.

*848. ஓம் ஸ்வாஸ்ய: நம:*

சிறந்த இருப்பை உடையவன்.

*ஓம் அக்ஷௌஹிநீ: நம:*

உலகத்துக்கு ஆதாரமான திக்கஜங்கள் குலாசவங்கள் இவற்றை உடையவள்.

*849. ஓம் ப்ராக்வம்ஸ: நம:*

எல்லா நிலையான பொருட்களுக்கும் நிலையான ஆதாரமானவன்.

*ஓம் கங்கா: நம:*

எங்கும் வ்யாபிக்கும் கங்காநதியைப் போல, எங்கும் வியாபிக்கும் பகவானுடன் சேர்ந்து வ்யாபிப்பவள்.

*850. ஓம் வம்ஸவர்த்தந: நம:*

நித்யஸுரிகளை மகிழச் செய்பவன்.

*ஓம் மந்தாகிநீ: நம:*

துக்கங்களை அழிப்பவள்.

*ஸ்ரீபூஸமேதாய ஸ்ரீமதே மரகதவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீவிஜயராகவ பரப்ரம்மணே நம:*

### குறிப்பு :

சென்னை – வேலூர் நெடுஞ்சாலையில் 80 கி.மீ. தூரம். காஞ்சிபுரத்திலிருந்து மேற்கே சுமார் 11 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

*தொடர்ந்து தரிசிப்போம்...*

செப்டம்பர் மாத இதழின் தொடர்ச்சி...



# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி.

எம்பெருமானின் திருக்கண்கள் கருணை ரசமான நீராலே நிறைந்த தடாகத்தைப் போன்றவையாம். அத்திருக்கண்களில் இருந்து வெளிப்படுகின்ற பார்வையானது கடலலைகளைப் போன்றவை. மகிழ்ச்சியான உயர்ந்த அப்பார்வையானது அலைகளோடு எம்பெருமான் என்னைத் தொடும்படி அநுக்ரஹிக்கப்பட வேண்டும். திருவேங்கடவனின், திருவருளே தெளிந்த சுத்தமான நீராகும். அந்த நீரிலிருந்து உண்டாகும் நீர்த்துளிகளோடு சேர்ந்த குளிர்ந்த வெள்ளத்தைப் போன்ற அனுராக வெள்ளத்தால் எம்பெருமான் என்னை அநுக்ரஹிக்க வேண்டும். தன்னுடைய தாமரைக் கண்களான திவ்விய மங்கள ரூபத்தை ஸ்ரீநிவாஸன் என்னுடைய கஷ்டத்தைக் காணும்படிச் செய்ய வேண்டும். குளிர்ந்த தன்மையை, மென்மையான தாமரையை வெற்றி கொண்டதான தன்னுடைய திருவடித்தாமரைகளை எம்பெருமான் என்னுடைய இதய தாபத்தை (எரிச்சலை) தீர்ப்பதற்காக என்னுடைய இதயத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று அநந்தாழ்வார் வேண்டுவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இந்த சுலோகமானது எட்டடிச் சந்தத்தோடு நயமாக அமைந்துள்ளது. ***"ஸகருண விலஸத் த்ருக் தரங்கை:"*** என்பதால் எம்பெருமானின் திருக்கண்களுக்கு நதி, கடல், தடாகத்தோடு ஒப்புமை கூறப்பட்டுள்ளது. எம்பெருமானின் அருள் வெள்ளம் எல்லையற்றது. மேடு பள்ளங்களைச் சமமாகச் செய்ய வல்லது.

அதாவது உயர்வு தாழ்வு, கற்றவன் கல்லாதவன் என்னும் பாகுபாடில்லை. "பங்கஜாக்ஷம் ரூபம்" என்னும்போது தாமரை போன்ற கண்களோடு சேர்ந்த ரூபம் (வடிவு) என்ற பொருள் மட்டுமேயல்லாது, ***"பங்கஜை: பங்கஜஸத்ருசை: அவயவை: அக்ஷ்ணோதி வ்யாப்நோதி இதி பங்கஜாக்ஷ:"*** வ்யுத்பத்தியை (விரிவு) உட்கொண்டு, தாமரைக்கு ஈடான திவ்விய அவயங்களோடு சொல்லலாம். ***"அப்ஜ பாத மரவிந்த லோசனம் பத்ம பாணிதலம்"*** என்றும் ***"செய்யக் கமலக்கண்கைகால்"*** என்றும் இதுகாறும் எம்பெருமானைத் துதிக்கப்படுகின்றானல்லவா! திருச்சந்த விருத்தத்தில் திருமழிசையாழ்வார் எம்பெருமானைப் "புண்டரீகனே" என்றழைக்கப்பட்டுள்ளார். "ஆலிலைத்துயின்ற புண்டரீகனே" என்றவிடத்தில் புண்டரிகாவயவனே, என்று வியாக்கியானம் அருளிச் செய்துள்ளார் பரம காருணிகரானப் பெரியவாச்சான்பிள்ளை. மேலும் செங்கணிவாய்ச் செங்கமலம் கற்பாதம் கை கமலம் என்கிறபடியே திங்யாயுதங்கள் அப்போதலர்ந்த செந்தாமரைகள் போலேயிருக்கையாலே புண்டரீகசப்த வாச்யனென்கிறது. த்ரைலோக்ய ரக்ஷணத்தால் வந்தப்ரீதி திருவதவிலே தோற்றியிருக்கிறபடி" என்கிறார்.

55வது பாசுரத்திலும் ***"பொன்னிசூழ் ரங்கமே புண்டரீக நல்லையே"*** என்னும் பிரயோகத்தைப் ***"புண்டரீகாவயவ ப்ரா சுர்யத்தாலே புண்டரீக வ்யபதேசம் - ஆநந்தோ ப்ரஹ்ம, விஜ்ஞானம் ப்ரஹ்ம இதிவதி"*** என்றும் வ்யாக்கியானித்திருப்பது கவனிக்கத்தக்கது. ஆகையால் இப்படிப்பட்ட விவரணமும் கூட இங்கு தெள்ளிதின் விளங்கும். மற்றும் "ஆபாத சூடம் பங்கஜாக்ஷம்" என்று யோஜிப்பதும் இம்மாதிரியான நயம் இன்பம் பயப்பதாக உள்ளது.

தொடரும்....



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

வேங்கடாசலப் பகுதிகளில் இருந்த கள்வர்களை சுதர்சனர் அழித்தார். ஆதலால் அப்பகுதி மக்கள் அவரைக் கண்டு நன்றி தெரிவிக்க வந்தனர்.

சக்கர ராஜா! பாவிகளையும், திருடர்களையும் அழித்தீர்கள். சாதுக்களைப் பாதுகாத்தீர். உங்களுடைய வீர பராக்கிரமத்தை எவராலும் எடுத்து விளக்கிக் கூற முடியாது. ஆயினும் எங்களுடைய மற்றொரு விருப்பத்தையும் தாங்கள் நிறைவேற்றிட வேண்டும். வடமேற்கு திசையில் இருக்கும் கொள்ளையர்களான கொடுமைக்காரர்களையும் அழித்து எங்களுக்கு உதவ வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் முழுவதுமாக விடுதலை பெற்றவராவோம்.

தூயாத்மா! இப்பகுதியை ஆட்சி செய்வதற்குத் தகுதியான தலைவர் எங்கும் இல்லாத காரணத்தினால் தான் கள்வர்களின் அட்டூழியம் எல்லையற்றுப் போனது. அவர்களால் சாதுக்களுக்கும் துன்பம் ஏற்பட்டது.

எங்களுக்கு தாங்கள் தெய்வம் போன்றவர். அயோக்கியர்களை அழித்து எங்களைக் காப்பாற்றக் கூடிய வல்லமை பொருந்திய தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றனர்.

அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட சக்கர மகாராஜா, ஆளுமையுடைய ஆட்சியாளனை நியமித்து விதிமுறைகளையும் வகுத்துக் கொடுத்தார். மேலும், அறவழியில் ஆட்சி செய்ய வேண்டும் எனவும் பணித்தார்.

அதன் பிறகு சாதுக்களைப் பார்த்து “உலக நலனை விரும்பும் உள்ளம் உள்ளவர்களே! இனி நீங்கள் விரும்பியபடி வேள்வியைத் தொடர்ந்து நடத்துங்கள். அச்சம் தவிர்த்து ஆனந்தமாக வாழுங்கள்” என்றார். சாதுக்கள் யாவரும் சுதர்சனரை வாழ்த்தினர்.

சுதர்சனர், கள்வர் பயத்தை முழுவதுமாக ஒழிக்க எண்ணி கந்தர்வ படைகளை வடக்கு நோக்கி செல்லுமாறு கூறினார். யுத்தபேரி முழங்க காட்டுப்பகுதிக்குள் சென்று அங்கு மறைந்திருக்கும் கயவர்களையும், கள்வர்களையும் கண்டுபிடித்து அழித்தனர். அவரிடம் இருந்து தப்பித்துச் சென்ற கள்வர்கள் தங்கள் தலைவனான காட்டு ராஜாவிடம் சென்றனர்.

தலைவா! நம் காட்டுப் பகுதிக்குள் யாரோ படைகளோடு வந்துள்ளனர். அவர்கள் யார் என்று தெரியவில்லை. ஆனால், அவர்கள் மிகவும் பலசாலிகளாகக் காணப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் போர் வியூகங்களையும் நன்கு அறிந்தவர்களாகவும் உள்ளனர். அப்படையினர் காட்டில் மறைந்திருந்த நம் வீரர்களைக் கொன்று குவித்துள்ளனர். அப்படைமுன் நம் படைவீரர்கள் தோற்று ஓடுகிறார்கள்.

ராஜா! தாங்கள் ஒருவர்தான் அவர்களை எதிர் கொள்ள முடியும். தங்களின் தந்தை சிவனை நோக்கித் தவம் செய்து மரணமில்லா வரம் பெற்றார். அதோடு தன் படைகள் துணை கொண்டு காடு, மலைகளில் வாழ்ந்து வந்த சாதுக்களைத் துன்புறச் செய்தவர். மற்றும்

வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வழிப்போக்கர்களின் செல்வத்தை அபகரித்தவர். அவரின் வலிமையை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. தாங்கள் அவரைக் காட்டிலும் மிகவும் பலசாலி ஆவீர் என விண்ணப்பித்துக் கொண்டனர். அவர்கள் சொல்லிய அனைத்தையும் கேட்டுக் கொண்ட காட்டு ராஜா, தம் பகுதிக்குள் வந்த சுதர்சன படைகளை அழித்துவிட வேண்டும் என்று முடிவு செய்து, போருக்குத் தேவையான ஆயுதங்கள் அனைத்தையும் சேகரித்துக் கொண்டு உடனே புறப் பட்டான். சுதர்சன படைகள் அனைத் தையும் அழிக்க வேண்டும் எனும் நோக்கத்தில் தன் சக்தி அனைத்தை யும் ஒன்று திரட்டிப் போராடினான்.

இருப்பினும் சக்கர ராஜா படை காட்டு ராஜா படையினரை மிக எளிதாக அழித்தனர். போர்க்களத்தில் குருதி வெள்ளம் அலைப்புரண்டு ஓடியது. இதைக்கண்ட காட்டு ராஜா பெரும் கோபம் கொண்டு தன் படைத்தளபதியான ஜ்வால பாதனைப் பார்த்து “படைத் தலைவனே! பார்த்தாயா? எங்கி ருந்தோ வந்த இப்படை நம் அசுரப் படையை அழித்து வருகிறார்கள். இனியும் அவர்களை விட்டு வைப்பதில் பயன் இல்லை. எல்லா ஆயுதங்களையும் கைக்கொண்டு சர்வ வல்லமையோடு போராடி அப்படையினரின் நம்பிக்கையை இழக்கும்படி செய்ய வேண்டும். இது என் ஆணை என்றான்.

ஜ்வாலபாதன் ராஜாவின் ஆணைக்குத் தலைவணங்கி போருக்குப் புறப்பட்டான். பல வகை யான ஆயுதங்களை ஏற்பாடு செய்து கொண்டான். ஒட்டகங்கள் பூட்டிய இரதத்தில் மிகவும் குரோதத்தோடு புறப்படலானான். சக்கரராஜாவின் படையைச் சற்று பின்வாங்குமாறு செய்தான். அக்காட்சியைக் கண்ட சக்கரராஜா “பாடபாமுகா! ஜ்வாலபதனின் வீரத்தைப் பார்த்தாய் அல்லவா? நீயோ சூராதி சூரன். உடனே புறப்படு. அவர்கள் மீது படையெடுத்துச் செல். அவனை உடனே கைது செய். நம் போன்ற வீரர்கள் இப்படிப்பட்ட அயோக்கியரை எதிர்த்து போராடுவதா என்று எண்ணாதே! எனக்குத் தெரியும் அவர்கள் நமக்கு நிகரானவர்கள் இல்லை என்பது.

ஆனால், அவர்கள் சாமான்யர்கள் என்று எண்ணக் கூடாது. அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று உபதேசம் செய்தார்.

சக்கர ராஜாவின் அனுமதியுடன் பாடபாமுகன் அவர்களின் போர் வியூகத்தை அறிந்து தெளிந்து போர் செய்தான். முதலில் ஜ்வாலபதனின் இரதத்தை உடைத்தெரிந்தான். விஷ்ணு சக்கரம் என்னும் பெயருடைய சக்கராயுதத்தைப் பிரயோகித்து ஜ்வால பதனின் தலையைத் துண்டித்தான். உடல் தரையில் சாய்ந்தது.

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே. சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

## குறுக்கெழுத்துப்புதிர் 101க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கோ | வி | ந் | த | ன் | த | 2 சு | ச் | 3 அ | யோ | த் | 4 தி |
| | | னை | ர | த | மோ | 5 தா | ம | ல் | | யி | ரு |
| னி | ன் | 6 செ | ண் | ப | க | ம | ல் | லி | கை | கோ | க் |
| | 7 வ | ங் | க | க் | | ன் | 8 மா | ய | 9 மா | ன் | கு |
| கை | ங் | 10 க | 11 க | 12 ம | ல | ப் | பூ | ம் | வ | த | று |
| 13 தா | ழை | ம | ட | ல் | | | | பூ | லி | 14 நா | ங் |
| 15 கு | | ல | ல் | லி | 16 ப | த் | த | ரா | வி | | கு |
| ன் | ம் | ப் | நி | கை | த் | | 17 தி | ரு | வா | ய் | டி |
| ற | க | 18 பூ | ற | ர | ரி | 19 வ | ழு | ந் | தூ | ர் | க |
| மே | ர | ர | ய் | வா | 20 நா | | 21 மா | த | வ | ம் | க் |
| ந் | 24 ஊ | ம் | 22 ம | 23 து | தா | | | | | | ரு |
| 25 தி | ரு | சி | ங் | க | வே | ள் | கு | ன் | ற | ம் | 26 தி |



## அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமானுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

*செப்டம்பர் மாத இதழின் தொடர்ச்சி...*

(மேதினி நஞ்சுமை ஆறுமெனத்துயர் விட்டு விளங்கிய நாள்) மேதினி – வடசொல். திருமால் மதுகைடபர்களைக் கொல்லும்போது அவர்கள் உடலிலிருந்து மேதஸ்ஸு (கொழிப்பு) பட்டதன் காரணத்தால் பூமிக்கு மேதினீ என்று பெயர். மேதினி – ஸப்த தீபவதியான மேதினி என்பர் பிள்ளான் என்னும் ஆசார்யர். ஏழு தீபங்களாவன – ஜம்பு, ப்லக்ஷ, சால்மலி, குச, கேரௌஞ்ச, சாக, புஷ்கரம் ஆகும். கலியும், கலி கார்யமான குத்ருஷ்டிகளும் போகையாலே "தவம் தாரணி பெற்றது" என்று அமுதனார் அருளியபடியே பூமியானது "நம் தலைச் சுமை சுழியும்" என்று துக்கத்தைவிட்டு பிரகாசிக்கிற திருநக்ஷத்திரமாகும்.

(மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்) மங்கையராளி – மங்கை மாடத்துக்கு அரசரான திருமங்கையாழ்வார். பராங்குசர் – பிற மதங்களுக்கு அங்குசம் போன்றவராகையால் நம்மாழ்வாருக்குப் பராங்குசர் என்று பெயர். இனி பூமியில் உண்டான திவ்ய தேசங்களை ஆதரிக்குமவர்களாகையாலே, திருமங்கைக்குத் தலைவரான திருமங்கையாழ்வார், பராங்குசர் என்ற திருநாமம் பெற்றவரான நம்மாழ்வார் முதலானவர்களுடைய ப்ரபந்தங்களை வளர்க்கச் செய்தவரான இராமாநுசர் அவதரித்த திருநக்ஷத்ரமாகும்.

(மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றும் உவந்திடு நாள்) பெருமாள் நித்ய வாஸம் பண்ணும் திவ்யதேசம் கோயில் எனப்படும். திருவரங்கம் *"அருவிசெய்யா நிற்கும் மாமலை"* என்று சொல்லப்படுமதான பெரிய திருமலை மற்றும் உண்டான திவ்ய தேசங்களும், தங்கள் தங்கள் வளப்பத்தை இராமாநுசர் சீர் செய்து தர்சனத்தை வளர்த்தமையால் வந்த பெருமை பொருந்தியவர் அவதரித்த திருநக்ஷத்ரமாகும்.

(செங்கயல் வாவிகள் சூழ்வயல் சிறந்த பெரும்பூதூர்ச் சீமான் இளையாழ்வார் வந்தருளிய திருவாதிரை நாளே) – மேற்கூறியவற்றுக்கெல்லாம் காரணமாய், "அங்கயல்பாய் வயல்" என்று அமுதனார் அருளியபடியே சிவந்து அழகிய மீன்களை உடைய குளங்களாலே சூழப்பட்டிருக்கிற விளை நிலங்களினாலே நித்யமாக உண்டான நகர அலங்காரங்களை உடையதாயிருக்கிற

ஸ்ரீபெரும்பூதூரை அவதார ஸ்தலமாகவுடைய ஸ்ரீமானாய் இளையாழ்வார் என்று பெயரையுடையவரான எம்பெருமானார் அவதரித்த நாள் திருவாதிரை திருநக்ஷத்ரமாகும்.

இளையாழ்வார் – கேசவஸோமயாஜிக்கு புத்ரன் பிறந்ததைக் கேட்டு, அம்மானான பெரிய திருமலை நம்பிகள் ஸ்ரீபெரும்பூதூருக்கு வந்து புத்ரன் முகவொளித் திகழக் கடாக்ஷித்து "இவன் பத்ராகாரகன். எல்லா சாஸ்த்ரங்களையும் அதிகரிக்குமாகையாலே இளைய பெருமாள் திருநாமத்துக்குத் தகுதியாக இளையாழ்வார் என்று திருநாமம் சாத்த வேணும்" என்றும், "பன்னிரெண்டாம் நாளிலே நாமகரண உத்ஸவம் பண்ணுவிக்கிற திருமலை நம்பியும் இவருடைய புத்ரருடைய வலது இடது தோள்களிலே விஸக்ஷணமான சங்கு சக்ரங்களையும், ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் என்று கேசவஸோமயாஜியாரைக் கொண்டு பண்ணுவித்து, பின்னர், இளையாழ்வார் என்று திருநாமம் சாத்தியருளினார்" என்று ராமாநுஜ திவ்ய சரிதை கூறுவது காண்க.

மாமுனிகள் உபதேச ரத்ன மாலையில் (27) *"ஏய்ந்த திருவாதிரை நாள்... நாற்றிசையும் கொண்டாடும் நாள்"* என்கிறபடியே நம் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த திருவாதிரை. இப்படி இருப்பதொரு சித்திரை மாதமும் நக்ஷத்ரமும் நேர்படுவதே. ஸ்ரீமானான பெருமாளான இராமன் அவதரித்த ஸ்ரீமானான மாதமும், அவர் அவதரித்த நக்ஷத்ரத்தோடு பக்கத்தில் அண்மையான நக்ஷத்ரமும் ஆயிற்று. இராமாநுசரும் ஸ்ரீமான் இளையாழ்வார் அல்லவா. இராமன், அவன் தம்பியான இளையபெருமாள் இருவருக்கும் முன்னாளும் பின்னாளுமான திருவாதிரையும் புனர்பூசமாகப் பெற்றது. இப்படி எல்லா நாள்களைக் காட்டிலும் திருவாதிரைக்கு ஏற்றம் ஏதுதான் என்று கேள்வி கேட்பவர்களுக்கு விடையாக லௌகிகராயிருந்து வைத்து இவ்வளவு அநுகூலம் உண்டாவதே என்று அதுவே காரணமாக இதன் ஏற்றத்தைப் பறை சாற்றுகிறேன் என்கிறார் மாமுனிகள்.

மேலும் மாமுனிகள் நீங்கள் இத்தை ஆதரிப்பது ஆதரியாதொழிவது ஆயினும் நான் என் கார்யம் செய்து வருவேன். ஸர்வேச்வரனுடைய விஜயத்துக்கு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் பறை அறைந்து திரிந்தாற்போலே வாமநன் சீலனான எம்பெருமானாருடைய அவதார திருநக்ஷத்ர வைபவத்தை எல்லா உலகும் பிரஸித்தமாம்படி பறை அறைந்து சாற்றுகிறேன் என்கிறார். இதுவும் ஒரு நாளே. *"ஸ்ரீமாந் ஆவிர்பூதபூ மௌ ராமாநுஜ திவாகர:"* என்று சொல்ல வேண்டுமன்றோ. *"உன்தன்நாமமெல்லாம் என்தன் நாவினுள்ளே அமரும்படி நல்க"* என்கிறபடியே இராமாநுஜருக்கு வாசகமான திருநாமங்கள் நிரந்தரமாக அனுபவிக்க வேணும் என்கிற என் நாவினுள்ளே இரவும் பகலும் திருநாமம் அமரும்படி அநுக்ரஹிக்க வேணும் என்கிறார். அப்படிப்பட்ட பெருமையுடைய இராமாநுசர் அவதரித்த நாளைக் கொண்டாடுவோமாக.

*வாழித்திருநாம உரை தொடரும்....*



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் புஷ்பயாக மஹோத்ஸவம்

**நாம் செய்யும் யாகங்களை ஏற்று, அதில் தவறு ஏதாவது நடந்திருந்தாலும், லோபம் இருந்தாலும் மொத்தத்தையும் போக்கி தாயார் அனுக்ரஹம் பண்ணுகிறாள். திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்குப் பிரம்மோத்ஸவத்தின் மறுநாள் புஷ்ப யாகம் நடத்தப்படுகிறது. அதில் யாகமாக எல்லாவித மலர்களாலும் கூடை கூடையாக ஐந்து டன்களுக்கும் மேலே ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். அதாவது திருவடியிலிருந்து திருமுடி வரையிலும் சேர்ப்பர். தேவர்கள் பூமாரிப் பொழிவது போலிருக்கும், தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும்.**



# டிசம்பர் 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் விருத்தியும், உயர்வும் உண்டு. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வயிறு உஷ்ணமடையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.புதிய முயற்சிகள் வெற்றி தரும். கணவன் மனைவி ஆரோக்கியம் மேம்படும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மொத்தத்தில் நிறைவான மாதமிது.

**ரிஷபம்**

ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். இளைய சகோதரனின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் துறையில் வேளைப்பளு அதிகமானாலும் நல்ல முன்னேற்றம் உண்டு. தாத்தா பாட்டி போன்ற பெரியோர்களால் லாபமுண்டு.பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். நிறைவான யோகம் தரும் அற்புதமான மாதமிது.

**மிதுனம்**

தொழில் துறையில் போட்டிகள் மிக அதிகமாகும். கடன் வாங்கி சுபச்செலவுகள் செய்வீர். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகவும் கவனம் தேவை. சொந்த தொழில் செய்பவர்களுக்கு தொழில் விருத்திக்கான செலவுகள் அதிகமாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கும். கடும் முயற்சியினால் வெற்றி பெறும் மாதமிது.

**கடகம்**

பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தந்தைக்கு செலவினங்கள் உண்டாகும். தாயாருக்கு வயிறு உபாதை ஏற்படும். புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தெய்வ அருளினால் முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

திருஷ்டியினால் தொழில் துறையில் தேக்க நிலை உருவாகும். நண்பர்கள், உறவினர்களால் செலவுகள் அதிகரிக்கும். பிறரிடம் பேசும்போது வீண் வார்த்தைகளைத் தவிர்க்கவும். மனைவியின் ஆரோக்கியக் குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். பெற்றோரின் ஆரோக்கியம் பாதிக்கும். பதவி உயர்வோடு இடமாற்றமும் உண்டு. பல சிரமங்களுக்கு மத்தியில் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. உடல் உஷ்ணமாகும். தொழில் துறையில் விருத்தி உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்க வழிவகை உண்டாகும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் யோகமான மாதமிது.

**துலாம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். செலவிற்கேற்ற வரவு உண்டு. குழந்தைகளால் நல்ல முன்னேற்றமும், சந்தோஷமும் உண்டு. வயிறு உபாதை உண்டாகும். புதிய வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**விருச்சிகம்**

புத்திசாலித்தனமாக செயல்பட்டு காரிய சித்தி பெறுவீர். நண்பர்கள் , உறவினர்கள் உதவுவர். பெற்றோரின் ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொழில்துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். தெய்வ அருளினால் பலவிதத்திலும் வெற்றி பெறும் யோகமான மாதமிது.

**தனுசு**

கடன் வாங்கிச் சுபச் செலவுகளைச் செய்வீர். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் போட்டியைச் சமாளிக்க வேண்டி வரும். நண்பர்கள், உறவினரால் பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகும். பூர்வீகச் சொத்துக்கள் பற்றி தற்போது பேச வேண்டாம். வேலை கிடைக்கும் வரை இருக்கும் வேலையை விட வேண்டாம். கடும் முயற்சியினால் வெற்றி பெறும் மாதமிது.

**மகரம்**

ஆரோக்கியக் குறைபாடுகள், பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் நீங்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். உங்கள் ஜாதக தோஷங்களுக்கு பரிகாரம் செய்ய ஏற்ற மாதமிது. மாதத்தின் முற்பகுதியில் தனவரவும், பிற்பகுதியில் சுபச் செலவும் உண் டாகும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. தெய்வ அருளினால் குடும்பத்திலுள்ள பிரச்சனைகள் யாவும் தீரும் மாதமிது.

**கும்பம்**

வேளைப்பளு அதிகமானாலும் அதற்குரிய வருமானம் உண்டு. ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகளுக்குத் தக்க மருத்துவம் கிடைக்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகளைத் தொடங்கலாம். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண்கள் பெறுவர். கடும் முயற்சியினால் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும் மாதமிது.

**மீனம்**

தொழில் துறையில் வருமானம் அதிகமாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தாராள பணப்புழக்கம் உண்டு. மனைவியின் ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். சகோதரர்களால் நன்மையுண்டு. பெற்றோரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சற்று நிதானமாக வெற்றி பெறும் மாதமிது.

சிறுவர் உலகம்

# பல்சுவை பகுதி


## சித்திரப் பகுதி

### எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



### படத்தைப் பாருங்கள் !









*கீழே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*

1) ஸ்ரீகிருஷ்ணருடன் தொடர்புடையவை
2) மார்கழி மாதத்துடன் தொடர்புடையவை
3) முருகனுடன் தொடர்புடையவை



### சரியான பாதையைக் கண்டுபிடி





குழந்தை கோதை ஸ்ரீகிருஷ்ணரிடம் சென்று மாலை அணிவிக்க வழிக்காட்டி உதவுங்கள்.

### வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

இடம் துன்பத்திற்கு கொடேல், வினை தூக்கி செய், இகழேல் தெய்வம், ஒட்டி தேசத்தோடு வாழ், சொல் தையல் கேளேல், மறவேல் தொன்மை, தொடரேல் தோற்பன.

வினாடி வினா

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-29

### ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. ஸ்ரீராமர் வனவாசம் மற்றும் எதனை ஒன்று என்று கூறுகிறார். ..........................................................
2. ஸ்ரீசுதர்சநாஷ்டகம் அருளிய ஆசாரியர் ..............................................................................
3. பெருமாள் கோயில்களில் முதலில் யாரை சேவிக்க வேண்டும் .......................................................
4. பெரியாழ்வாரைக்காட்டிலும் உயர்ந்தவர் யார் .........................................................................
5. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய எனும் பாசுரம் உள்ள பிரபந்தம் .........................................
6. மார்கழி மூலத்தில் உதித்த சிவரூபன் யார் ...........................................................................
7. கார்த்திகை மாதம், ரோஹிணி நட்சத்திரத்தில் அவதரித்தவர் .......................................................
8. யார் வீழ்ந்தவுடன் சல்லியன் கௌரவப் படைகளுக்குத் தலைமை தாங்கினார் ....................................
9. பதஞ்சலி கூறும் பரிணாமத்தின் மூன்று வகைகள் .....................................................................
10. பத்மபிரியை என்ற வார்த்தையின் பொருள் ............................................................................
11. அனுமன் கரங்கள் பட்டு இறந்த முதலை தான்யாலி யாராக மாறினாள் ...........................................
12. கார்த்திகை தீபத் திருவிழாவில் முதல் நாள் ஏற்றும் தீபம் ..........................................................
13. குருபரம்பரா பிரபாவம் என்னும் நூலை அருளியவர் ..................................................................
14. எம்பெருமான் திருக்கண்கள் எந்த நீரால் நிறைந்த தடாகம் போன்றது. .........................................
15. ஜ்வாலபாதம் எந்த ராஜாவின் ஆணைக்கு உட்பட்டு போருக்குப் புறப்பட்டான் .................................

## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.12.2024.



**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

## சக்கரத்தைச் சுற்றுங்கள்! அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

- கிருஷ்ணரிடம் உபதேசம் பெற்றவர்
- கிருஷ்ணர் உபதேசித்த திவ்ய நூல்
- கிருஷ்ணர் எவ்வாறு போர் முனைக்கு சென்றார்
- தேர்க் கொடியில் இருக்கும் விஷ்ணு பக்தன்
- கிருஷ்ணரின் தேரினை இழுக்கும் குதிரைகளின் எண்ணிக்கை
- பாரதப் போர் யார் யாருக்கு இடையில் நடைபெற்றது
- பாரதப் போர் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது
- பகவத் கீதையை உபதேசித்த தசாவதாரப் பெருமாள்?




### விடைகள்

1) அர்ஜுனன், 2)ஸ்ரீமத்பகவத்கீதை, 3)தேரோட்டி, 4) அனுமன்,
5) நான்கு, 6)பாண்டவர்–கௌரவர், 7) 18 நாட்கள், 8) ஸ்ரீகிருஷ்ண பகவான்.

## நீதியை அறிவோம்!

*சித்திரத்தை வரிசைப்படுத்துங்கள், கதையை அறிந்துக் கொண்டு கதை உணர்த்தும் நீதியை பின்பற்றுங்கள்!*



( சித்திரத்தின் வரிசை : 2,1,3,4)
நீதி : ஒற்றுமையே பலம்

## கணித விளையாட்டு




பூட்டில் உள்ள கணித விடைக்கு பொருத்தமான சாவியைப் பொருத்துக


### விடைகள்

1) ii, 2) i, 3) iv, 4) iii, 5)v

# சிறந்த கொடை வள்ளல்

சித்திரக் கதை

கதை மூலம் : திரு.டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு. கே. துவாரகாநாத்




உடனே கர்ணன் காவலாளிகளிடம் காய்ந்த சந்தனக் கட்டைகளை கொண்டு வருமாறு ஆணையிட்டான். காவலாளிகளும் கட்டைகள் கிடைக்காமல் திரும்பி வந்தனர்
பிரபு! காய்ந்த சந்தனக் கட்டைகள் எங்கும் கிடைக்க வில்லை.
அப்படியா?
கர்ணன் காவலாளிகளை அழைத்து அரண்மைக்கு அருகில் இருந்த கட்டிடத்தினை உடைத்து அதில் உள்ள சந்தனக் கட்டைகளை கொண்டு வந்து பிராம்மணரிடம் தரும்படி உத்தரவிட்டார். அதோடு அவை மழையில் நனையாமல் இருக்க ஓலைக் கூரையும் அமைக்கும்படி கூறினார்.
அப்படியே அங்க நாட்டு அரசே!
உம் மனைவியின் ஈமக்கிரியை இச்சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்தி நடந்திடுங்கள்.
கர்ணன் கொடுத்த சந்தனக் கட்டைகளை வண்டியில் ஏற்றிச் செல்லும் வழியில் அர்ஜுனனிடம் தான் சந்தனக் கட்டைகளைப் பெற்ற செய்தியை பிராம்மணர் கூறினார்.
அர்ஜுனா புரிகிறதா?
அர்ஜுனன் தலை குனிந்தான். கிருஷ்ணர் மேற்கொண்டு விவரிக்கலானார்.
தானம் செய்ய வேண்டும் எனும் எண்ணம் பலமாக இருந்தால் எவ்வாறேனும் செய்திடுவர். அவர்களுக்கு தடங்கல்களே வராது.
ஸ்ரீகிருஷ்ண பகவான் சிறு புன்னகை புரிந்தார். கர்ணனின் தான குணத்தின் பெருமையை அர்ஜுனனும் உணரலானான்.
அங்க நாட்டு அரசன் கர்ணன் தானங்கள் அளிப்பதில் உலகறிய புகழ் பெற்றான். அவன் புகழும் நிலைத்து நின்றது.
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்



**ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...**

- **"ஸப்தகிரி"** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **"ஸப்தகிரி"** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/-, ஆயுள் சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/-
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஒ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **"ஸப்தகிரி"** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- **"ஸப்தகிரி"** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.











**மேலும் தகவல்களுக்கு :**
**0877- 2264543, 2264359**

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-11-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

